
பட்டாபியின் **முகநூல் இதழ்**

செப்டம்பர் 2023 FB Journal Voice of Pluralism



தோழர் பட்டாபியின் செப்டம்பர் 2023 முகநூல் இடுகைகள்

முகநூல் இதழ்

அவ்வப்போது முகநூலில் செய்திடும் இடுகைகளை சேர்த்து தந்தால் என்ன என்ற எண்ணம் எழுந்ததின் விளைவாக , இந்த மின் இதழ் வெளியிடப்பட்டுள்ளது. எவருக்கும் தான் பேசுவதை எழுதுவதை ரசிக்கும் மகிழ்ச்சி மறைவாக இதயத்தில் அமர்ந்து குதிக்கவே செய்யும். அது எவ்வளவு பைத்தியக்காரத்தனமான உளறலாக இருந்தாலும், இந்த சுய போற்றல் கூடவே அலையும்.

சேர்த்து வைத்தல் என்கிற குணம் இல்லாத மனிதன் இல்லை போலும். எதையாவது ஒன்றை மனிதன் தான் இருக்கும்வரை சேர்த்துக்கொண்டேயிருக்கிறான். அவனுக்கு மதிப்பு என எண்ணந்தரும் எல்லாவற்றையும் சேர்ப்பான். அப்படி சேர்த்ததை ' தரமாட்டோம் போ ' என குழந்தைத்தனமாக பத்திரப்படுத்தியும் வருவான்.

அவனின் முன்னொரு காலத்தில் சேர்க்கப்பட்டது, திடிரென அவனை விட்டுப் போகும். சிலநேரங்களில் அவனே கழித்து விடுவான். போதும் என்பான். ஆனாலும் இன்றைக்கான ஒன்றை சேர்க்கவும் செய்வான். இப்படியான மனிதனாக நான் சேர்த்த பக்கங்கள் ஏராளம். கழித்தவையும் ஏராளம். இப்போது இந்த முகநூல் பக்கம் சேர்க்கப்பட்டுள்ளது. இதுவும் ஒருநாள் கழிந்து போகலாம். இதில் பட்டாபியின் இடுகைகள் செப் 30- செப் 1 என அடுக்கப்பட்டுள்ளன. இதை பார்ப்பவர்கள் சேர்க்கலாம் அல்லது கழிக்கலாம்.

அன்பன்,

பட்டாபி   சென்னை 10-10-2023

செப் 30 2023

இர்பான் ஹபீப் சோசலிசம்

மார்க்சிய வரலாற்று அறிஞர் இர்பான் ஹபீப் எடிட் செய்த புத்தகம் on Socialism. 2009ல் அலிகார் வரலாற்றாய்வாளர் சொசைட்டி சார்பில் துலிகா கொணர்ந்த புத்தகம். 2018 வரை 5 பதிப்புகளைக் கண்டது. பின்னர் புதிய பதிப்புகள் வந்தது பற்றி எனக்கு தெரியவில்லை.

மார்க்ஸ் முதலாளித்து சமுதாயத்தின் போக்குகள் அதன் உபரி சுரண்டல் குறித்து தான் தன் வாழ்நாளை செலவிட்டார். மார்க்ஸ் மற்றும் எங்கெல்ஸ் மூலவர்கள் என்ற வகையில் ஆங்காங்கே அவர்கள் விழைந்த, ஆய்வில் வந்தடைந்த சோசலிச சமுதாயம் குறித்து ஆங்காங்கே தொட்டுச் சென்றனர். தோழர் இர்பான் ஹபீப் அவர்களின் எழுத்துக்களில் கிடைத்தவற்றை extracts என்ற வகையில் இந்நூலில் எடுத்து தரும் உழைப்பை செய்துள்ளார்.

இந்நூலில் 6 அத்தியாயங்களை அவர் அடுக்கியுள்ளார். மார்க்ஸ் எங்கெல்ஸ் குறிப்பிகள் முதல் மூன்று அத்தியாயங்களில் வருகின்றன. மூலவர்களைப்போலவே லெனின் மிக முக்கிய கோட்பாட்டளாராகவும், 1917 அக்டோபர் புரட்சி மூலம் ருஷ்யாவில் அவர்கள் சரியெனக் கருதிய சோசலிச கட்டுமான வேலைக்கான கால்கோள் ஊன்றியவராகவும் கருதப்படுகிறார். அவர் குறிப்புகளிலிருந்து தேர்வு செய்து நான்காம் அத்தியாயத்தை இர்பான் தந்துள்ளார்.

லெனின் மறைவிற்கு பின்னர் ஓரளவு கோட்பாட்டாளராகவும், சோசலிச கட்டுமானம் என்பதை , தான் சித்தரித்த மார்க்சிய லெனினிய வகையில் இழுத்துச் சென்றவராகவும் பார்க்கப்படுகிற ஸ்டாலின் குறிப்புகள் 5 ஆம் அத்தியாயத்தில் இடம் பெற்றுள்ளன.

சீனாவில் சோசலிச கட்டுமான சோதனைக்கு அடிக்கல் இட்டு அதை ஓரளவிற்கு தனது மார்க்சிய லெனினிய புரிதலில் சீனக்கட்டுமானமாக வெளிப்படுத்திய மாவோ எழுத்துக்களிலிருந்து எடுக்கப்பட்டவை 6வது அத்தியாயத்தில் இடம் பெற்றுள்ளன.

எடிட்டர் குறிப்புகள் என்கிற வகையில் இர்பான், இறுதியில் The Marxian Theory of Socialism and the Experience of socialist Societies என்பதை எழுதியுள்ளார்.

முதல் பகுதி மார்க்ஸின் கம்யூனிஸ்ட் அறிக்கை மற்றும் மூலதன முதல் பாகத்திலிருந்தும், எங்கெல்சின் 1847 principles of communism என்பதிலிருந்தும் தரப்பட்டுள்ளது.

இதில் இன்றும் கவனிக்கப்படவேண்டிய சில வரிகள் (நான் உணர்வதை எடுத்துக்கொண்டுள்ளேன்.)

The first step in the revolution by the working class is to raise the proletariat to the position of ruling class, to win the battle of democracy

Combination of agriculture with manufacturing industries, gradual abolition of the distinction between town and country by a more equitable distribution of the population over the country.

Free education for all children- abolition of children's factory labour- combination of education with industrial production.

Education will enable young people quickly to go through the whole system of production, it will enable them to pass through from one branch to another according to the needs of society or their inclinations

மார்க்சிய புரிதலில் அவசிய உழைப்பு நேரம் மற்றும் உபரி உழைப்பு நேரம் என்பது அடிப்படையான உரையாடல். முதலாளித்துவ சமூகத்திலிருந்து பிறக்கும் சோசலிச சமூகத்தின் ஆரம்பம் , அதன் முந்திய சமூக சாயல்களை அறவே நீக்கிய ஒன்றாக இருக்காது என்பதும் அங்கு புரிதலாக இருக்கும். இந்த இடத்தில் மார்க்ஸ், புதிய சமுதாயத்தில் உழைப்பு நேரம் necessary labour time என்கிற கோட்பாட்டு அடிப்படை இருந்தாலும் அது சற்று நீட்டிய நேரமாகத்தான் அமையும் என விளக்கியிருப்பார்.

The notion of means of subsistence would considerably expand, and the labourer would lay claim to an altogether different standard of life. ..because a part of what is now surplus labour, would then count as necessary labour, I mean the labour of forming fund for reserve and accumulation என மார்க்ஸ் எழுதியதை இர்பான் மூலதனம் வால்யூம் 1 டோனா தார் எடிட் செய்ததிலிருந்து பக் 539-540 தந்திருப்பார்.

இன்னொரு சுவையான செய்தி எங்கெல்ஸ் கேள்வி பதில் கம்யூனிச கோட்பாட்டில் கிடைக்கிறது. அது கேள்வி 21 what influence will the communist order society have upon family.

எங்கெல்ஸ் பதில் விரிவாக செல்லும் . அதில் பொருத்தமான வரிகள்

It will make the relation between the sexes a purely private relation which concerns only the persons involved, and in which society has no call to interfere-

..destroying twin foundation hither to existing the marriage and the dependence through private property of the wife upon husband and children upon parents. (இதை common rights over women என சொல்வதாக கொச்சை படுத்துவர்களை எங்கெல்ஸ் விமர்சிப்பார்). Prostitution is rooted in private property, communist organisation puts an end to it என எங்கெல்ஸ் எழுதியிருப்பார்.

- கூடுதல் அறிமுகத்தை வாய்ப்புள்ளபோது பார்க்கலாம்

செப் 29, 2023 Pension Revision CAT judgment

Substance of PB CAT Judgment in simple terms

As I understood, I am bringing here the substance of the judgment in its simplest form, as possible as I can. The interpretations are mine, one may differ. kindly Read carefully

The relief sought by the Associations gone to CAT are

1. Revision of Pension by DOT on the basis of fitment in IDA as on 1-1-2017 for all those BSNL absorbed Retirees prior to 1-1-2017 (that is for pre 2017)

2. Revision of Pension - FP- Minimum pension by DOT for the BSNL combined service pensioners w.e.f 1-1-2017 based on the recommendation of 7 th CPC (max pension is not sought explicitly)

3. Revision of pension by DOT for BSNL combined service pensioners parallel to revision of pension to the CG servants without linking with pay revision in BSNL (here the parallel sought is BSNL pensioners to CG servants not BSNL absorbed employees to CG servants)

4. Any other order fit and proper to this case

In nut shell , the reliefs sought are - revision of pension w.e.f 1-1-2017 for pre 2017 pensioners, fitment on IDA, based on the recommendation of 7 th CPC, without linking to pay revision of BSNL.

The sought relief by the applicants in this case , whether they belong to pre 2017 or post 2017 or associations having them as members, all demanded before PB CAT is ‘only revision of pension ‘ to those retired before 2017 on the basis of 7 th CPC and fitment on IDA. No remedial explicit prayer for post 2017, even though included applicants may be from the side of post 2017.

The relief sought by everyone gone to CAT is revision of pension w.e.f 1-1-2017, for only those who were all getting pension on 1-1-2017. The relief is not sought to those getting pay on 1-1-2017 , the employees- post 2017 pensioners. They were not getting pension on the relief sought date that is on 1-1-2017, and so no question of revision of pension to them on that date.

Pay revision of BSNL is only to its employees on the roll as on 1-1-2017. The relief sought is that it should be delinked. That is delinking the pensioners on 1-1-2017 from the employees on roll on that 1-1-2017 - regarding the demand of revision of pension as per 7 th CPC.

OK good. Let us see the substance of the PB CAT order for the sought reliefs.

-The OAS stand allowed

-The competent authority is directed to forthwith revise pension

-Revision of pension wherever applicable

-Revision of pension strictly in accordance with the relevant rules and entitlement governing pension to employees of the Central Govt

-Maintain strict parity

-Revision of pension as notified by the CG on the recommendations of pay commission shall stand extended in favour of the applicants, analogous to the revision of such pension in case of CG pensioners.

The PB CAT is directing the competent authority from the respondents side to revise pension , wherever applicable. The PB CAT felt the demand of revision of pension is justifiable one , analogous to CPC recommendations and rules governing pension of the CG employees .

Kindly note the order saying -Revision of pension wherever applicable . From this, I presume revision of pension is not applicable to those who were not getting pension on 1-1-2017, the post 2017. This order is not a binding one to them.

One can understand -Revision of pension analogous to CG pensioners

But 'Revision of pension strictly as per rules and entitlement governing pension of CG employees' Directed by CAT is creating ambiguities. One can understand fixation of pension strictly as per CG rules. 37 A ccs rules serves the purpose of fixing pension not any pension revision to the employees, and the CG employees are getting their pension fixed as per CCA rules. Employees are entitled to pension on retiring, but not revision of pension on their date of retiring, unless a change in pay that caused fixation of their pension . In this case CPC is helping the CG employees. For BSNL employees PRC is helping to change their pay.

Absence of any mentioning of terms like 7 th CPC, date w.e.f, delinking, pre 2017 pensioners , specific fitment rate are all there, but order is to revise pension wherever applicable . Applicability for revision of pension comes only to those getting pension . The latest CPC date of effect is from 1-1-2016 for revision of pension. The relief sought is from 1-1-2017 by the applicants. In the case of

death cum retirement gratuity, the enhancement to 20 lakhs was given effect from CPC date that is from 1-1-2016.

Then what is the course for post 2017 (as per PRC) or post 2016 as per CPC is the biggest question that need all our attention. Unless any pay change actually or notionally on 1-1-2017 as per 3rd PRC or on 1-1-2016 as per 7th CPC (here on what scales) is solved, it is difficult to settle the issue favourably to all the stakeholders pre or post 2017.

The PB CAT , if at all given any relief, it is only to pre 2017 even one can interpret to only pre 2016 , as date of effect is silent in the judgment.

Trade unions in BSNL need to study the impact of this judgment, as they are all fighting for wage revision on 3 rd PRC. Rejection or welcoming is not the question. The question is whether this judgment is compatible with their demand of wage revision on 3rd PRC.

These are all my interpretations only. Associations or Respondents like DOT may think differently and can give their versions.

0600 hrs 29-9-2023 R. Pattabiraman

செப் 28, 2023

1915 காங்கிரஸ்- காந்தி

1915 டிசம்பரில் பம்பாயில் கூடிய காங்கிரஸில் காந்தி மிகச் சாதாரண தொண்டராக தெரிந்தார். அங்கு பேச்சு மணிக்கணக்கில் இருந்ததையும் காந்தி உணர்ந்தார்.

சூரத்தில் ஜனவரி 2, 1916ல் ஆர்ய சமாஜ் ஆண்டு நிகழ்வில் அவர் பங்கேற்றார். அங்கும் வண்டிக்கணக்கில் பேச்சு இருந்ததைப் பார்த்தார். ஏன் இந்தியர்களாகிய நாம் இவ்வளவு பேச பேரார்வம் கொண்டு அலைகிறோம் என்கிற எண்ணம் அவரிடம் ஏற்பட்டது. இப்படி பேச்சைக் கேட்டுகொண்டேயிருந்தால், செய்ய வேண்டிய வேலைகள் என்னவாகும் என்கிற கவலை அவருக்கு ஏற்பட்டது.

அங்கேயே மாநாட்டில், சரி இந்த 7 மணி 8 மணி பேச்சை கொஞ்சம் தள்ளிவைத்துவிட்டு, சில பேராவது என்னுடன் வந்தால், சூரத் நகரை கூட்டி பெருக்கி சுத்தம் செய்யமுடியும். மக்களும் நன்றியுடன் பார்ப்பார்கள் என்றார். கேட்டவர்கள் அதிராமல் இருப்பார்கள் என்ன..

மேலும் எல்லாம் இங்கிலீசில் பேசுகிறோம். ஆனால்

Our society will be reformed only thorough our own language. We can ensure simplicity and dignity in communication என்று பேசும் கலையை அவர் சொல்லித்தருகிறார்.

என் தொழிற்சங்க அனுபவத்திலும் மணிக்கணக்காக பேசுவது நடந்துள்ளது. சம்பந்தம் இருக்கோ இல்லையோ ஒரு மணி நேரத்திற்கு மேல் பேசினால்தான் சிறப்பான பேச்சு என்ற மாயச் சுழலை அனுபவித்தவன்- செய்தவன் என்கிற வகையில் காந்தி சற்று என்னை வெட்கப்பட வைக்கிறார். எங்களிடம் ‘அதிக நேரம் பேசுபவர் அதிக விவரமானவர் ‘ என்கிற எண்ணம் நிரம்பியிருக்கிறது.

காந்தியின் முறையில் சாக்ரடிஸ் கேள்வி methodology ல் அதற்கான பொருத்தமான பதிலைத்தேடும்- காரியார்த்தமான நடைமுறையைத் தேடும் மொழி சொற்செட்டு பழக்கமானதைக் காண்கிறேன். One step at a time என்கிற அவரின் பெரிய நடைமுறை சார்ந்த அம்சத்தை, நானும் வேலைப்பார்த்த தொழிற்சங்க இயக்கத்தில் அதன் father fig ஆக இருந்த தோழர் குப்தா எடுத்துக்கொண்டார். One step with all என்கிற

சோதனையை அவர் செய்து பார்த்தார். அவரும் வேலைக்கு உதவாத மொழியிலிருந்து தன்னை தள்ளி வைத்துக்கொண்டார். வானளாவிய முழக்கங்களை காந்தி வைத்ததில்லை. தோழர் குப்தாவும் தனது தோழர்களின் pulse என்பதையே, (அரசாங்கத்தின் பலம் அறிந்து) அளவாக கொண்டார்.

சரியான கேள்விகளை உருவாக்குவதும், வாயளப்பு வாண வேடிக்கைகளை காட்டாமல், கூடியவரை பொருத்தமான பதில்களை தேடுவது என்கிற பேச்சுக்கலை எழுத்துக்கலையில் காந்தி பெரும் பயிற்சியாளராக இருந்தார். கைத்தட்டிற்காகவோ, மகிழ்ச்சி ஊட்டுவதற்காகவோ அவர் பேசியதில்லை. தன்னால் செய்ய முடிந்த வேலைகளுக்கு மட்டுமே ஒப்புக்கொடுத்தார்.

எல்லாவற்றையும் சாதிக்க முடியும் என்கிற பேச்சில் நம்பிக்கையை அவர் தொலைத்து விடாமல், அடிமேல் அடி வைத்து, களைப்படையாமல், கூட வருபவர்களின் ஆர்வம் குலையாமல், self suffering உடன் வெகுதூரம் பயணித்தவர் காந்தி. அவரிடம் சத்தம் எழுந்ததேயில்லை. சன்னமான குரலில் ஆக உயர் காரியங்கள் நடக்க தன்னையும், தன்னுடன் வருபவர்களையும் பழக்கப்படுத்தினார். அவரது பேச்சில் எழுத்தில் எந்த ஒரு குழுவின் சுய லாபத்திற்கான மொழி அசைவுகள் இருந்ததில்லை. அனைவருக்குமான இணக்கமான அசைவுகளை அவர் மேற்கொண்டார்.

காந்தி தனது பேச்சில் எழுத்தில் தனி மனித உருவம் மற்றும் குணங்களை ஒரு நாளும் தாக்கியதில்லை. தனிநபர் செயலின் குணங்களை நல்லதா அல்லாத ஒன்றா என்று மட்டுமே விவாதிக்கும் கலையை கற்றுத்தேர்ந்தார். இணக்கம் என்பது மட்டுமே அவரின் மொழிக்கூட்டத்தில் இருந்தது.

செப் 27, 2023

Pension Revision

I understand always my limitation on issues concerned and dealt for the last few years. One such issue is pension revision for the BSNL absorbed retirees.

My writeups may convince or may not convince the comrades concerned, but I never fail to go deep and give serious thought over that. I always aim how to bring the bonds to all the stakeholders .

I tried to maintain the spirit of Nagara SC Judgment, that pensioners placed in similar positions are a class. My understanding is, may not be a convincing one to many, CG pensioners retired fully from the Govt service, getting CDA is a class of themselves , whereas we the 4 lakh BSNL absorbed forming ourselves a class of different nature on IDA.

In order to join that CG class for the sake of pre 2017 pensioners , we cannot leave our bonds with our post 2017, who were all in 2nd prc scales on 1-1-2017 as employees.

I don't say solution is impossible. But without breaking heads, it is not an easy or casual one.

I agree that my knowledge on that is limited one.

Healthy criticism about my views is good to find solution. But bad and filthy language is no use to anyone. Naming and bracketing are very old organisational methods failed in its experiments.

So finding answer to the relevant questions are the sure road to solving the issues cropping up because of this latest PB CAT Judgment.

Though the Judgment is helping to bring parity with the pre 2016 pensioners in clear terms, it created disparity ,not in open terms, amongst the United bsnl absorbed since 1-10-2000.

I have been telling that the demand of simultaneous settlement of pension revision with pay revision would carryforward the existing bonding.

After oct 17 th 2022, I felt DOT is ready to bring pension revision , ofcourse with nil fitment, in the absence of pay revision, finding solution to post 2017 also w.e.f 1-1-2017. It seemed to me that Spirit of DOT was good, and I thought it would help to find solution to both pre and post 2017 on 3rd PRC scales. Some associations tried to bring some improvement on fitment. But they could not till

this date. That solution presented by DOT maintained the parity amongst the BSNL absorbed as a single class.

Unfortunately or fortunately to many pre 2016 pensioners some Associations gone to PBCAT and won the case of CPC parity fitment. This new situation brought the dislocation of post 2017 from the single class position of the BSNL absorbed as per this judgment.

This Judgment on the face of it favours pre 2016 to tie them with CG pensioners and CPC. In central govt their single class position was safeguarded by simultaneous implementation of both pay revision and pension revision as per CPC.

Here in our case , our demand is only pension revision , after knowing as somebody is telling 'wage revision is mirage in bsnl '.

Unless pay is changed in some form to the employees on 1-1-2017 that is post 2017 , their pension calculation would continue only on 2nd prc scales. The question that we need to find answer is, how to make them fit in CG parity as per CPC and as per this Judgment.

The associations and their experienced leaders may have confidence to find an answer. I wish them every success.

0800 hrs 27 -9 2023 R.PATTABIRAMAN

செப் 26, 2023

Organisation- Individual

An Organization is always bigger than an individual. But the individual is always better when he places facts when comparing the organisation spreading false Faiths.

Com Namari

செப் 25, 2023

Pension Revision Judgment

Congratulations to all those leaders and Pensioners' Associations of BSNL and MTNL who labored a lot for bringing a favorable CAT judgment for their applications and prayers. The copy of Judgment was first sent to me by Com Mathi of Vellore and later by many comrades.

I am one amongst the serious contestants against the associations demanding 7th CPC fitment and scales for the sake of those retiring on or after 1-1-2017 that is post 2017 pensioners (the employees on 1-1-2017). All my 'learned' articles and write-ups were thrown into dust bin by this PB CAT judgment pronounced on sep 20, 2023. All the criticism leveled against me is getting its justification as on date by this judgment. The future criticism about 'poverty' of my understanding on this issue will also find its justification.

But my heart does not feel guilty as I wrote only the found truth, and mind says 'nothing that placed is wrong'. I did not get that legal stamp for my views, and the similar views of mine were not considered by the PBCAT.

I wish the Associations every success to carry forward the judgment to the logical conclusion, the realization of Pension Revision on parity with CPC recommendations. DOT and the other Respondents should understand the sentiments of lakhs of Pensioners waiting patiently for the last 6 years and help them to find a solution without dragging the case further legally and causing delay in preparing cabinet note and other procedures.

I have given below my study about the case and relevant connecting points. I have dealt both pre 2016 OM and post 2016 OM of DOPPW and their difference. Those interested may go through and others can ignore. Those interested, kindly read carefully.

II PB CAT Judgment in nut shell

The allowed OAs are 1272/2020, 1271/2020, 1329/2020 filed by various Associations and members of that Associations. The respondents are DOT, DOPPW, DPE, BSNL and MTNL , but the OA 1329 filed by AIBSNLPWA is not including BSNL, of course correctly, as one of its respondents like the other two OAs .

As per the ORDER of Hon' Mr Tarun Shridhar, Member A

Accordingly, with the request and consent of learned counsel for the parties, all the O.A(s) have been taken up together for disposal and these are being decided by a common order. However, facts of only OA No. 1272/2020 are being discussed.

Arguments on behalf of the applicants have been collectively put forth, led by Mr. Sanjay Ghosh, learned Senior Advocate (of 1329 AIBSNLPWA) assisted by other advocates.

The following relief was sought by the way of OA.

"(a) Pass an Order directing the Department of Telecommunications to revise the pension/family pension/minimum pension w.e.f. 01.01.2017 for the BSNL combined service Pensioners, who were absorbed from DOT/DTS/DTO we.f. 01.10.2000 and retired prior to 01.01.2017 by applying the fitment formula on IDA pension as on 01.01.2017;

(b) Pass an Order directing the Department of Telecommunications to revise the pension/family pension/minimum pension w.e.f. 01.01.2017 for the BSNL combined service Pensioners, who were absorbed from DOT/DTS/DTO w.e.f. 01.10.2000 analogous to the revision of pension/family pension/minimum pension for the Central Government Pensioners based on the recommendations of the 7th Central Pay Commission;

(c) Pass an Order directing the Department of Telecommunications to revise the pension for BSNL combined service pensioners parallel to the revision of pension of the Central government servants without linking with Pay revision in BSNL:

(d) Pass such other further order (s) as this Hon'ble Tribunal may deem fit and proper in the facts and circumstances of the present case and in the interest of justice."

The following are the observations of PBCAT

Para 22

There is no ambiguity that at the time of their placement and absorption in BSNL and MTNL, it was categorically stated that the erstwhile employees of the Department of Telecommunication shall continue to be governed by their existing terms and conditions of the service which means that they shall continue to be treated as government servants for all intents and purposes. It is also not in dispute that from time to time, the recommendations of the Central Pay Commission, as accepted and notified by the government, were made applicable in their case too. There is no ambiguity with respect to the general terms and conditions governing absorption, as circulated and quoted in para 5 of this order, stating

categorically that provisions of Rule 37 (A) of the CCS (Pension) Rules, shall guide payment of pension to these employees.

in para 26

We reiterate that even on their absorption in the corporate undertaking, the terms and conditions of services governing them were to remain the same as they existed when they are employees of the Department of Telecommunications. Further, these terms and conditions include pension and family pension and this has been expressly stated in the rules and several subsequent communications which have been elaborately quoted in some of the preceding paragraphs of this order.

in para 27

We have no hesitation in concluding that the present application deserves positive consideration. The government had given a promise and stated it in black and white. How could it now retract from the promise, that too not by any law or rules but by simply a refusal to honour it?

The main operative portion of judgment in para 28

In view of the elaborate discussion above, the OA stands allowed. The competent authority amongst the respondents is directed to forthwith revise the pension and family pension wherever applicable, strictly in accordance with the relevant rules and the entitlement governing pension to various sets of employees of the Central Government, maintaining strict parity. It is clarified that the benefits of revision of pension and family pension as notified by the Central Government on the recommendations of the Pay Commission, shall stand extended in favour of the applicants, analogous to the revision of such pension in case of Central Government pensioners

III My observations on judgment

The prayer is directing the DOT to implement the pension revision and the judgment is direction to the Competent authority amongst the Respondents - DOT or DOPPW , DPE may not be I think, but DOE In the case of post 2017 as post 2016 employees got their benefit vide DOE OMs.

The direction is

".. to forthwith revise the pension and family pension wherever applicable, strictly in accordance with the relevant rules and the entitlement governing pension to various sets of employees of the Central Government, maintaining strict parity."

That is revise pension and FP 'wherever applicable' and this in accordance 'with rules and entitlement governing various sets of employees of the CG', maintaining 'strict parity'.

The clarification given is

" It is clarified that the benefits of revision of pension and family pension as notified by the Central Government on the recommendations of the Pay Commission, shall stand extended in favour of the applicants, analogous to the revision of such pension in case of Central Government pensioners."

That is recommendations of Pay commission shall stand extended, and is analogous (that is similar to) the revision of such pension in case of CG pensioners .

Ok good

1. CG pensioners got their pension revision in Jan 2016 simultaneously with the Pay revision of CG employees on Jan 2016. There is a link between pre 2016 CG pensioners and CG employees on 1-1-2016, the post 2016 pensioners. Is it the same/ similar situation regarding absorbed BSNL/ MTNL pensioners? can it be construed the analogus one in this regard? The CAT judgment is silent on this question

2. The Judgment speaks about rules and recommendations of CPC. So if rules meant the relevant OMs then we have to see both the OMs and also recommendations of 7th CPC

3. The 37 A is the main rules and the OM that suits 37 A is the OM dt 4-8-2016 suited to post 2016 but not OM of pre 2016. But now the judgment, if I presume or understand correctly asks to suit the OM dated 4-8-2016 for pre 2016. The judgment is not directly quoting the OMS. My understanding cannot be above the legal judgment.

4. 7th CPC recommendations as per ch 10.1

The minimum pension based on the recommendations of this Commission will increase by 2.57 times over the existing level (3500 to 9000). (this need to be implemented)

The Commission recommends enhancement of ceiling of gratuity from the existing 10 lakh to 20 lakh from 01.01.2016. The Commission further recommends, as has been done in the case of allowances that are partially indexed to Dearness Allowance, the ceiling on gratuity may increase by 25 percent whenever DA rises by 50 percent. (it was partially implemented for BSNL employees retiring from 1-1-2016 but linkage with DA need to be done)

The Commission, after examination of the matter, recommends the following revised rates for payment of death gratuity: (For BSNL employees retiring after this order implemented)

pension revision -

The Commission recommends the following pension formulation for civil employees including CAPF personnel, who have retired before 01.01.2016:

i) All the civilian personnel including CAPF who retired prior to 01.01.2016 (expected date of implementation of the Seventh CPC recommendations) shall first be fixed in the Pay Matrix being recommended by this Commission, on the basis of the Pay Band and Grade Pay at which they retired, at the minimum of the corresponding level in the matrix. This amount shall be raised, to arrive at the notional pay of the retiree, by adding the number of increments he/she had earned in that level while in service, at the rate of three percent. Fifty percent of the total amount so arrived at shall be the revised pension.

ii) The second calculation to be carried out is as follows. The pension, as had been fixed at the time of implementation of the VI CPC recommendations, shall be multiplied by 2.57 to arrive at an alternate value for the revised pension.

iii) Pensioners may be given the option of choosing whichever formulation is beneficial to them.

DOPPW OM 4th Aug 2016 is the OM for pre 2016 (F No. 38/ 37/ 2016- P & PW (A) (ii) and the subject matter for this is implementation of Govt's decisions on the recommendations of the 7th CPC-revision of pension of pre 2016.

In that

4.1

For existing pensioners,who have retired before 01.01.2016, the revised pension/family pension with effect from 01.01.2016 shall be determined by multiplying 6th the pension/family pension, as had been fixed at the time of implementation of Central Pay Commission (CPC)recommendations, by 2.57.

The amount of revised pension/family pension so arrived at shall be rounded off to next higher rupee.

4.4 The minimum pension with effect from 01.01.2016 will be Rs. 9000/- per month (excluding the element of additional pension to old pensioners). The upper ceiling on pension/family pension will be 50% and 30% respectively of the highest pay in the Government (The highest pay in the Government is Rs. 2,50,000 with effect from 01.01.2016).

4.5

The quantum of pension/family pension available to the old pensioners/ family pensioners shall continue to be as follows:-.... (from 80 years)

10. The pension/family pension as worked out in accordance with provisions of Para 4.1. and 5 above shall be treated as 'Basic Pension' with effect from 01.01.2016. The revised pension/family pension includes dearness relief sanctioned from 1.1.2016 and shall qualify for grant of Dearness Relief sanctioned thereafter.

Let us not forget there is another OM of DOPPW dated 4-8-2016 but file is different viz F. No. 38/37/2016- P&pW (A) (i). the subject matter of this OM is Revision of Provisions regulating pension/ gratuity/ commutaion of pension/ FP etc. This is for post 2016 pensioners, that is employees on 1-1-2016. As per 37 A , this was extended to us BSNL retirees from 1-1-2016 where ever relevance felt. This OM is not for pension revision fitment. This only speaks about Grautity enhancement with 20 lacs and DA linkage, death gratuity, also minimum and maximum pension.

POST 2017 issue

The next issue is about post 2017. For them the recommendations are part of post 2016 OM, which was partially implemented and DA linked aspect and minimum, maximum pension only remaining to be implemented. OM of pre 2016 pensioners not applicable to them. Only Pay change recommendations implemented for them(post 2016) as per DOE CCS Revised Pay rules. Fortunately in AIBSNLPWA 1329 OA DOE is made as one of the Respondents.

There is no specific Order for this kind of post 2017 pensioners, the employees on 1-1-2017 in this judgment as per my study. They were not pensioners on 1-1-2017. Suppose without finding any remedial measures to address this issue, this judgment is implemented, then there would two different type of pensioners, one getting pension parity with CG pensioners and other post 2017 pensioners on 2nd PRC scales. I hope this issue arised out of this judgment need to be addressed.

10.30 PM 25-9-2023 - R. Pattabiraman

செப் 25, 2023

இ எம் எஸ் சாதி வர்க்கம் கட்சிகள்

தோழர் இ எம் எஸ் எழுதிய முக்கிய ஆய்வுக் கட்டுரையில் ஒன்று castes , classes and parties in Modern political development. தனியான சிறு வெளியீடு அளவிற்கான கட்டுரையிது. அவரது selected essays இடம் பெற்ற ஒன்று.

இந்தியாவிலும் படிநிலை சமுதாய வளர்ச்சியில் வரலாற்றுக்கு முந்திய pre historic primitive communist society- tribal society இருந்தது என்கிற வரலாற்று பொருள்முதவாத பார்வையை அவர் வைத்திருப்பார். கேரள அனுபவத்தில் ஓணம் சிறப்பை அவர் சொல்லும்போது 'மாவேலி' இந்தக் காலத்தின் அடையாளம் என்கிற முடிவிற்கு வருவார். பிறர் சொத்தில் வாழ விரும்பி , அவர்களை கட்டுக்குள் வைக்கும் வர்க்க உருவாக்கத்தை 'வாமன' அடையாளத்தில் அவர் தருவார்.

இந்தியாவில் இந்த பழங்குடி சமூகம் நால்வர்ண சமூகமாக பிளவுண்டு- பின்னர் ஏராள சாதிகளின் சமூகமாக மாறிய வித்தியாசத்தை அவர் ஏற்று ஆய்வைத் தொடர்வார்.

பெரும்பான்மை மக்கள் சிறுபான்மையினரால் சுரண்டப்பட்டனர் என்பதை சொல்லிவிட்டு, the exploiting minority happened to be the 'unconscious tool' of human civilisation என்கிற அம்சத்தை தன் மார்க்சிய புரிதலில் அவர் தந்ததை பலரும் கவனித்திருக்க மாட்டார்கள். அவர் தரும் வரிகள்

The steady development of human civilisation with the flowering of literature, the arts and philosophy, leading to the flowering of sciences and culminating in the S&T revolution of the modern era- these are the social consequences of emergence of class society.

தன் கருத்திற்கு துணையாக அவர் எங்கெல்சின் டூரிங்கிற்கு மறுப்பிலிருந்து without the slavery of antiquity no modern socialism என்கிற வரியை எடுத்தாள்வார். இங்கு வேதம் உபநிடதம், இன்னும் இஸ்லாமிய கலாச்சாரம் எல்லாம் வர்க்க சமுதாயம் உருவானதன் விளைவுகளாகவே இ எம் எஸ் பார்க்கிறார்.

நால்வர்ணத்திலும் கூட முதலில் பழங்குடி சமூகத்தின் பிரதானமானதான சத்திரிய போர் வீரர்கள், அடுத்துதான் போருக்கான வெற்றியை வேண்டிய சடங்குகளை நடத்திய அடுத்த நிலை பிராம்மணர்- பின்னர் அவர்களுக்கு இணையாக

உயர்ந்தவர்கள்- உயர அனுமதிக்கப்பட்டவர்கள், அடுத்து வைஸ்யர் என்பவர் தான் இருந்திருக்கவேண்டும் என்கிறார் இ எம் எஸ்.

நிலப்போரில் இடத்தைப் பிடித்த பின்னர் தோற்கடிக்கப்பட்டவர்கள், இவர்களுக்கான வேலைகளை செய்யவைக்கப்பட்ட சூத்திரர் ஆகி நால் வர்ணம் அமைந்ததாக இ எம் எஸ் விளக்குவார். போர்களும் சாம்ராஜ்ய உருவாக்கங்களும் அதற்குரிய இராணுவம் தளவாடங்களும், மேலும் மேலும் புதியவகைபட்ட சாதிப்பிரிவுகளை உருவாக்கியிருக்கலாம் என தோழர் இ எம் எஸ் ஊகம் செல்கிறது.

கேரளாவில் வைஸ்யர் வர்ணம் இருந்ததாக தெரியவில்லை என்கிறார் தோழர் இ.எம் எஸ். பழங்குடி சமூகத்தின் முழுமைக்கு முன்பாகவே சாதி வடிவம் தெரியத்துவங்கியதால், அடுத்த அடுத்த சமூக அமைப்புகளில் அது திடமாகிக்கொண்டே சென்ற பார்வையை நாம் இ எம் எஸ் இடம் பெறமுடிகிறது. அவருடைய மிக முக்கிய கவலை

The institution of caste in India conceals the essence of class division in society.

அதே நேரத்தில் பல நூறாண்டுகளாக சமூகத்தில் நீடித்து வரும் இந்த சாதி சமூக அமைப்பை மாற்ற வேண்டிய - புரட்சிகரமான சமூக அமைப்பிற்கான முன் தேவையாக உள்ளது என்பதை இ எம் எஸ் சொல்கிறார். ஆனால் சமூகத்தில் மாற்றம் வருவதையும் கவனிக்க வேண்டும் என்கிறார். கூட்டுக்குடும்பம் என்கிற பழைய அமைப்பின் அச்சாணி போய், புதிய குடும்பங்கள் உருவாகி வருகின்றன. கிராமங்கள் தன்னிறைவு குறைந்து இந்திய மற்றும் உலக சந்தையுடன் உறவாடவேண்டியுள்ளது.

சேர்ந்து உணவு உட்கொள்வது என்பதில் காணப்பட்ட taboo உடைந்துள்ளது. கலப்பு மணம் நடை பெறுகிறது. இ எம் எஸ் இங்கு எழுதுவது deathblow delivered to the three institutions of caste, village community and joint family.

பிரிட்டிஷ்காரர்களிடமிருந்து விடுதலைக்கான நீண்ட போராட்டக் காலத்தில் சமூகத்தில் அரசியல் கட்சிகள் மதிப்பும் செல்வாக்கும் பெறத்துவங்கின.

As political democracy advances, as social and class conflicts intensified, the mass organisations and political parties of the various classes and strata acquire increasing importance என்கிற முக்கிய advancement யை நம்பூதிரிபாட் வைக்கிறார்.

கேரள சமூக மாற்றத்தில் சிரியன் கிறிஸ்துவர், நாயர், தமிழ் பிராமணர், நம்பூதிரிகள், முஸ்லீம்கள் என பலதரப்பட்ட பிரிவினரின் பிரிட்டிஷ் ஆதரவு எதிர்ப்பு நிலைப்பாடுகள் குறித்த புரிதலை இ எம் எஸ் தொட்டுக்காட்டுவார்.

விடுதலைக்கு பின்னர் வளர்ந்து வரும் கேரள அரசியலில் சாதிக்கு பங்கேயில்லை எனச் சொல்லமுடியாது. அதேபோல் சாதி மட்டுமே அனைத்தையும் அங்கு தீர்மானிக்கிறது என சொல்லவும் முடியாது என்கிற புள்ளியை இ எம் எஸ் எட்டுகிறார். அவர் இக்கட்டுரையை முடிக்கும்போது எழுதும் வரிகள்

..while classes and political parties are assuming greater and greater importance in the political life of the state, the existence of caste as a social factor and problems arising therefrom cannot be wished away

மேற்கூறிய இ எம் எஸ் வரிகள் இன்றைய அரசியல் பார்வைக்கு அவசியமான ஒன்றாக தோன்றுகிறது. விடுதலைக் காலத்திலிருந்து ஆட்சியில் இருந்த காங்கிரஸ் அரசியல் கட்சியாக பெற்ற செல்வாக்கு, கடந்த சில ஆண்டுகளாக பாஜக பெற்று வரும் செல்வாக்கு, தமிழகத்தில் முதல் 20 ஆண்டுகள் காங்கிரஸ் செல்வாக்கு, பின்னர் திமுக அதிமுக அரசியல் கட்சிகள் செல்வாக்கு , மே வ, கேரளா, திரிபுரா ஆட்சிக்கு வந்த கம்யூனிஸ்ட் கட்சிகள் - என்கிற பெரும் ஆய்விற்கு போதுமான இடமளிக்காமல், அவர்களின் நிறை குறைகளை எடைபோடாமல் , அரசியல் கடந்து போகமுடியாது

ஆண்டவர்களும் ஆள நினைப்பவர்களும் பண்டைய இந்திய சமூகத்தின் மீதான வெளிச்சத்தைக் காட்டியே தங்களின் குறைகளை, தங்கள் செய்யமுடியாதவற்றை மறைத்து அரசியல் செய்ய விரும்பும் போக்கு அதிகரித்து வருகிறது.

மாறிய அம்சங்களை கவனித்து சொல்லாமல், ஏதோ இந்தியா 2000 ஆண்டுகளுக்கு முன்னரான மனுக்காலம் போல சித்தரிப்பதும், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரான இஸ்லாமியர் காலம் போல சித்தரித்து அதற்கு வரலாற்று பழி தீர்க்க ஏக உருவெடுப்பு காட்சிகளாகவும் அரசியல் ‘மறைப்பு வேலைகளை’ செய்து வருகிறது.

‘இன்றைய அரசியல்’ அமைப்பு சட்ட வாய்ப்புகளுடன் எவ்வளவு தூரம் பயணிக்க முடியும் , தடைகளாகும் அம்சங்கள் என்ன, இணைக்கப்படுத்தி ஏற்றத் தாழ்வுகளை சரி செய்ய வேண்டிய சட்ட திட்டங்களுடன் பயணிக்க வேண்டியுள்ளது.

செப் 24, 2023

ராஜாஜி நவபாரத சிற்பி வரிசை

ராஜாஜி வாழ்க்கை குறித்து ராஜ்மோகன் காந்தி, மூர்த்தி எழுதிய ஆங்கில புத்தகங்களை படிக்க முன்னர் வாய்ப்பு கிட்டியது. பப்ளிகேஷன்ஸ் டிவிஷன் தமிழில் சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரி என்கிற ஆர் கே மூர்த்தி எழுதிய ஒன்றை - 280 பக்கங்களில்- 2006 ல் கொணர்ந்தனர். நவபாரதச் சிற்பிகள் வரிசையில் வந்த புத்தகமது.

இதை முழுமையான அவரது வரலாறு என எடுத்துக்கொள்ளவேண்டாம். ஓரளவிற்கு அவரை அறிமுகப்படுத்தும் புத்தகமாக , இளம் தலைமுறையினர் எடுத்து வாசிக்கலாம். சாகசங்கள் என பெரிதாக இருக்காது. தனக்கு அவ்வப்போது சரியென உணர்ந்ததை பேசியும் சொல்லியும் வந்ததுடன் , நடந்தும் காட்டுபவராக இருந்தார். உச்சமும் சென்றார். வீழ்ச்சியும் அடைந்தார். கொண்டாடவும் பட்டார். தூற்றவும் பட்டார்.

இந்த நூலில் கடைசி பகுதியில் குடியரசு துணைத்தலைவர் ஜெயபிரகாஷ் நாராயணன் என ஓரிடத்தில் , வி வி கிரி என்பதற்கு பதிலாக சொல்லப்பட்ட தவறை உணர்ந்தேன். அதே போல் 1920களின் நீதிக்கட்சி ஆட்சி என்பது சொல்லப்படாமல், கடந்து போயிருப்பதையும் பார்த்தேன்.

ஆர் கே மூர்த்தி 1979 ல் எழுதிய Rajaji Life and Work புத்தகத்தின் மொழியாக்கம் எனக் கருதி தான் எடுத்து படித்தேன். அப்படியில்லை என உணரமுடிந்தது. இந்த தமிழ் புத்தகத்தை எவரும் 2 அல்லது மூன்று அமர்வுகளில் படித்துவிடமுடியும். எளிய ஒன்றுதான்.

ராஜாஜி முதல்முறை சிறை அனுபவம் பெறும் காட்சி ஒன்று இதில் சுவையாக இடம் பெற்றிருக்கும். காந்தி ஒத்துழையாமை என்றால் ஒரே வருடத்தில் சுயராஜ்யம் என்கிற நம்பிக்கையை தந்த நேரம். ராஜாஜியும் இளைஞராக, ஆம் மூன்று மாதத்தில் சிறையிலிருந்து வெளிவரும்போது, காந்தி சுதந்திரம் பெற்று இருப்பார் என நம்பிக்கையை தெரிவித்து சிறைச் செல்வார்.

டிசம்பர் 21, 1921 அன்று ராஜாஜிக்கு மூன்றுமாத தண்டனை என்றனர். ஆஸ்துமா நோயாளி அவர். தயாரானார் ராஜாஜி. ஒரு டப்பா பற்பொடி, கிராம்பு, எழுத ஒரு குயர் காகிதம், பவுண்டன் பேனா, பென்சில்கள், குண்டூசிகள், இங்க் பாட்டில், கூஜா இவற்றுடன் புத்தகங்கள்.

பைபிள், ராயின் 7 பாக மகாபாரதம், ஷேக்ஸ்பியர் நாடகங்கள், ராபின்சன் குருசோ- படிக்க மூக்கு கண்ணாடி, படுக்க ஜமக்காளம், கொப்பளத்திற்கு களிம்பு , ஆஸ்துமாவிற்கான கலவை மருந்து என அவர் எடுத்து வைத்துக்கொண்டார்.

சிறையில் அலுமினிய வில்லை ஒன்றை கழுத்தில் மாட்டினர். அதில் படிப்பறிவில்லாதவர் என்கிற செய்தியும் இருந்தது. அவர் மூதறிஞர் என ஜெயில் அதிகாரிகளுக்கு தெரிந்திருக்காது. வேலூரில் தனிச் சிறை. அங்கு தான் ஜெயில் டைரி எழுதினார். சாக்ரடிஸ் பற்றி எழுதத் துவங்கினார்.கைராட்டை ஒன்றை வாதித்துப் பெற்றார்

அவரது திருச்செங்கோடு ஆசிரம் பற்றிய செய்தி ஒன்று. 12 ஏக்கர் நிலம் கொடுத்தவர் இரத்தின சபாபதி கவுண்டர். ஆசிரமத்தை திறந்து வைத்தவர் அன்றைய ராமசாமி நாயக்கர்- நாம் அறியும் தந்தை பெரியார். அங்கு 'ஹரிஜன வகுப்பு' சார்ந்த இருவரை சேர்த்தது கிராமத்தில் அதிர்ச்சியை உருவாக்கியது. திருச்செங்கோடு செயல்களும் அனுபவமும் தமிழக அரசியல் பொதுப் புத்திக்கு கொண்டு செல்லப்படவில்லை. இன்றைய அரசியல் bias நடந்தேறிய பல ஆரோக்கிய நல்ல விஷயங்களை எடுத்துச் சொல்லாமல், வெறுப்பிற்கான விதையை நடும் விஷயங்களை மட்டுமே ராஜாஜி குறித்து சொல்லி வைத்துள்ளது.

திருப்பதியில் தாழ்த்தப்பட்ட சாதிக்காரர் நுழைந்துவிட்டார் என்பதை ஆசாரம் பெயரில் சிலர் எதிர்த்து ஆட்டம் போட்டனர். போலீஸ் வழக்கு அந்த அப்பாவி மீது பதிவானது. ராஜாஜி கருப்பு அங்கியை தூரவைத்து பல மாதங்களாகிவிட்டது. ஆனாலும் நியாயம் என்கிற வேட்கை அவரை செயல்பட வைத்தது. பாதிக்கப்பட்ட மனிதருக்காக அவர் வழக்காடினார். அம்மனிதர் கடவுளைக் காண போனதில் எந்த குற்றமும் இல்லை என்கிற ராஜாஜியின் வாதம் ஏற்கப்பட்டு, அம்மனிதர் விடுவிக்கப்பட்டார்.

1937 ஜூலையில் ராஜாஜி சென்னை மாகாண முதல்வராக தன் 9 அமைச்சர்களுடன் பொறுப்பேற்றார். தாழ்த்தப்பட்ட பிரதிநிதி அமைச்சரவையில் என்பதும் நடந்தேறியது. சேலத்தில் சாராய விற்பனை தடை என்ற சோதனை நடந்தது. நேர்மை, பைல்கள் பார்ப்பதில் தேர்ச்சி, நேர ஒழுங்கு, நிர்வாக ஒழுங்கு, கடன் நிவாரண சட்டம், ஜமின் ஒழிப்பு சோதனைகள் நடந்தன.

கவர்னர் ஜெனரல், கவர்னர், மத்திய அமைச்சர், மாநில முதல்வர் , நேருவுடன் இணக்கம்- உரசல், சுதந்திரா சோதனை, திமுகவுடன் உறவு ஆட்சிக்கு வர துணை நிற்றல் போன்ற ஏராள அனுபவங்களை தன்வழி தந்து போனார் ராஜாஜி.

இந்தியை திணித்தார் - குலக்கல்வி கொணர்ந்தார்- சுதந்திரா எனும் பிற்போக்குசாரிகளின் சோதனையை செய்தார் என்கிற விமர்சனங்களுக்கும் அவர் உள்ளானார். அவர் இந்தி திணிப்பையும் பிற்காலத்தில் எதிர்த்தவராகவும் இருந்தார்.

தமிழகத்தில் அவருக்கு சத்தியமூர்த்தி காமராஜ் உடன் வேறுபாடுகள் இருந்தது. காந்தியுடன் கூட அவர் 1942ல் முரண்பட்டார். திரும்ப அவர் காங்கிரசில் வர பலர் எதிர்த்தையும் அவர் உணர்ந்தார். அவர் ஒதுங்கிப் போனாலும், படேல் சொன்னார்- நேரு சொன்னார்- காமராஜ் வேண்டினார் என்பதற்காக மிக உயர்ந்த பொறுப்பான கவர்னர் ஜெனரல் பொறுப்பில் இருந்துவிட்டு, கவர்னர் மத்திய அமைச்சர் , முதல்வர் என பொறுப்பேற்று கசந்து பலமுறை வெளியே வரவேண்டிய அனுபவத்தை பெற்றார்.

அவர் இந்த பதவிகளையெல்லாம் எடுத்திருக்கக்கூடாதோ என்கிற எண்ணம் என்னிடம் strong ஆக இன்றும் இருக்கிறது.

ஏராளம் எழுதினார் அவர். இந்திய ஞானம் என அறிந்ததை அவர் எளிமையாக தன் மக்களுக்கு கொண்டு செல்ல முயன்றார். வேத உபநிடதம், இதிகாசம் குறித்து எழுதினார். தமிழ் ஆக்கங்களைக் கொணர்ந்தார். அவர் உணர்ந்த வாழ்க்கை மற்றும் அரசியல் அறம் குறித்து உரையாடினார். தான் எளிய மனிதன் என்ற உணர்வில் இருந்தார்.

ஆரம்பத்தில் பெரியாருக்கு அவர் inspiration ஆகக்கூட இருந்தார். பல்வேறு முரண்களுடன் இருவரும் நட்பு பாராட்டினர். மணியம்மை அவர்களை திருமணம் செய்யலாம் என்கிற முடிவை பெரியார் ராஜாஜியிடம் கலந்து பேசினார் என்பதை அனைவரும் அறிவோம். ராஜாஜி வேண்டாமே என்கிற அறிவுரையை தந்தார் என்ற செய்தி போயிருக்காது. தான் அரசாங்க பொறுப்பில் இருப்பதால் திருமணம் பதிவில் சாட்சியாக கையெழுத்து இடமுடியாது எனச் சொன்ன தகவலும் இப்போது சொல்லப்பட்டு வருகிறது.

காந்திக்கும் இப்படி ஒரு நெருக்கடியான நேரத்தில் ராஜாஜி மனசாட்சியாக நின்றார். காந்தி தனது spiritual wife என தாகூரின் அக்கா மகள் சரளா தேவி செளத்ராணியை குறிப்பிட்டிருந்தார். ராஜாஜி இங்கு காந்தியிடம் தனது எச்சரிக்கை உணர்வை வெளிப்படுத்தவே செய்தார்.

நேருவை கேட்க ஆளில்லாமல் போகின்ற ஜனநாயக விபத்தை ராஜாஜி எச்சரித்து வந்தார். பொதுவுடைமை குறித்து எழுதியும், பி சி ஜோஷி, பிலிப் ஸ்பராட்

போன்றவர்களுடன் அன்பாக இருந்த அவர் கம்யூனிச எதிர்ப்பாளராகவும் இருந்தார். அவரால் மினு மசானி போன்ற ஆரம்ப சோசலிஸ்ட்களை ஈர்க்கவும் முடிந்தது.

தமிழக அரசியல் வெளி ராஜாஜியை bias இல்லாமல் - அவரது நிறை குறைகளை scan செய்ய தவறிவிட்டதாகவே எனக்கு தோன்றுகிறது.

Sep 23, 2023

மகாத்மா சுசிலா நாயர் வால்யூம் 5

Mahatma Gandhi vol 5 க்கு India Awakened என்கிற தலைப்பிட்டிருந்தார் சுசிலா நாயர். இதுவும் நீள அகல 720 பக்கங்கள் கொண்ட அளவில் பெரிய புத்தகம்தான். சுசிலாவும், அவரது ஆய்வுத்தோழர்கள் குழாமும் பெரும் உழைப்பை நல்கி நமக்கு இந்த வால்யூமை விட்டுச் சென்றுள்ளனர்.

ICHR நிதி உதவி செய்யாவிட்டால் இந்த வால்யூம் வந்திருக்காது. 1990லேயே பிரதி தயாராகிவிட்டது. புகழ் வாய்ந்த சோசலிஸ்ட்டாக அறியப்பட்ட அச்சுத் பட்வர்த்தன் அழகான முன்னுரை எழுதியிருக்கிறார். 1994ல் 1000 காப்பிகளும், 2010ல் 500 காப்பிகளுமாக, இந்த வால்யூம் இதுவரை 1500 காப்பிகள், நவஜீவனால் கொணரப்பட்டுள்ளன.

பியாரிலால் போலவே, அவரது மறைவிற்குப் பின் அவரது செயலை அதே dedication உடன் சுசிலா செய்யலானார். பியாரி போலவே, நுண்ணிய, துல்லியமான விவரங்களை சேகரித்து இந்த வால்யூமிலும் அடுக்குகிறார்.

தென்னாப்பிரிக்கா சத்தியாகிரக போராட்டங்கள் மூலம் இந்தியர்களுக்கான dignity யை உயர்த்திவிட்டு, லண்டன் வந்து கோகலேவை பார்க்க காத்திருந்து , 1915 ஜனவரியில் காந்தி குடும்பத்துடன் இந்தியா திரும்புவதிலிருந்து, ஏறத்தாழ 10 ஆண்டுகள் நிகழ்வு போக்குகளை 4 பகுதிகளாக சுசிலா இதில் கொண்டு வந்துள்ளார்.

மீண்டும் இந்தியாவை புரிந்துகொள்ளல், ஆசிரமம் அமைத்தல், சாந்தி நிகேதன் செல்தல், பனாரஸ் அதிர்ச்சி தரும் உரை என்கிற பகுதியுடன், மூன்று முக்கிய விவசாய தொழிலாளர் போராட்டங்களாக சம்பரான், கேதா, அகமதாபாத் மில் என்கிற மாடல்களை உருவாக்குவது பேசப்பட்டுள்ளது.

மாண்ட்போர்ட், கிலாபத், ஒத்துழையாமை, சௌரி சௌரா அனுபவம் , கோர்ட்டின் முன் தன் வழக்கில் காட்டும் புதுமை 6 ஆண்டுகள் தண்டனை- 2 ஆண்டில் வெளிவருதல், சுயராஜ்ய கட்சியினருடன் முரண்- இணக்கம் என இந்த வால்யூம் நீள்வதைக் காண்கிறோம்.

அச்சுத் பட்வர்தன் ஆகஸ்ட் 12, 1990 ல் எழுதிய முன்னுரை இந்த வாசகங்களுடன் முடியும்

The noble life story of Mahatma Gandhi is the history of the political emancipation of this land. It concerns the moral regeneration of earnest citizens and their fearless non violent resistance to misrule

and injustice. It marks a historic chapter in the story of Man in the twentieth century. It is therefore, invested with perennial significance

திரும்ப கவனமாக அச்சுத் எழுதியிருக்கும் இந்த 6 வரிகளை படிக்கும் எவருக்கும் அதன் சத்திய ஒளியை உள்வாங்க முடியும். History of political emancipation of this land

Concerns the moral regeneration of earnest citizens

Fearless non violent resistance to misrule and injustice

அரசியல் விடுதலை எவ்வளவு misuse செய்யப்படவேண்டுமோ, நாம் அதை அவரவர் பங்கிற்கு செய்து வருவதை உணரமுடியும்.

இரண்டாவதான அவரின் தாகமான moral regeneration எதிர்மறையாக degeneration ஆகி கீழ் நோக்கி செல்வதை காண்கிறோம். Fearless resistance என்பது இரைச்சல் ஆர்ப்பாட்டம் என்கிற சிறு அளவில் நின்று போகக்கூடிய soap bubble demonstration ஆக முடிந்து போவதைக் காண்கிறோம்.

தீர்வை நோக்கி தீர்விற்காக என்பதைவிட protest for protest sake என்கிற இயக்கங்கள் just expose that is the end game என சுருங்கி போவதை உணரமுடிகிறது.
அரசியல் காந்தியை தள்ளி வைத்து - moral regeneration என்பதை பொருட்படுத்தாத- வாக்கு அரசியலுக்கு உகந்த தலைவர்களின் பல்லக்கிற்கு பின்னால் என்கிற ஓட்டத்தை எடுத்துக்கொண்டுள்ளது. வெறுப்பிற்கு பதிலடி பல மடங்கு வெறுப்பு என்கிற உரையாடல் பெருகி பிரவாகமாக சென்று கொண்டிருப்பதை உணரமுடிகிறது. எங்கும் தீ உமிழும் நாக்குகள் - வெறும் வசவுகள் என மொழி திண்டாடுகிறது.

சுசிலா போன்ற மறந்து போன பெரும் தலைமுறை ஒன்று தன் வாழ்நாள் உழைப்பை தந்து , அவை எங்கோ ஓரமாகவாவது இருந்துகொண்டு மினு மினுத்துக்கொண்டு இருக்கவே செய்யும். 21 ஆம் நூற்றாண்டின் மின் உமிழும் வெளிச்சத்தில் சுசிலாவின் படைப்பும் மின்மினி பூச்சியாகவது இருந்துகொண்டுதான் இருக்கும். பார்ப்பவர் கண்களுக்கு அது இயற்கை அழகை கூட்டும்.

sep 22, 2023

பெரியவர்கள் முரண்கள்

அரசியல் உலகில் , சமய உலகில் கூட ஒரு குறிப்பிட்ட விஷயத்தில், எல்லா தருணங்களிலும் ஒரே மாதிரியான கருத்தையே ஒருவர் சொல்லிக்கொண்டிருந்தார் என பொதுவாக பார்க்கமுடிவதில்லை. காந்தி பல தருணங்களில் முன் பேசியதை விட்டு மாற்றி பேசியிருப்பார். இந்த முரண் குறித்து பேசும்போது, அந்த அந்த கணத்தில் உண்மையென தான் உணர்வதை சொல்லவேண்டியிருப்பதை அவர் விளக்கியிருப்பார். இறுதியாக சொன்னதை தனது கருத்தாக எடுத்துக்கொள்ளுங்கள் என்பார்.

ராஜாஜி கூட இந்தியை திணித்தார் என்ற பெயரைப்பெற்று போராட்டங்களை சந்தித்தவர்தான். பிற்காலத்தில் இந்தி திணிப்பு கூடாது என்ற கருத்தை அவர் வெளிப்படுத்தலானார்.

பெரியார் அவர்கள் இந்தி திணிப்பு எதிர்த்து கடுமையாக போராடியவர் என்கிற அம்சம் அனைவருக்கும் தெரியும். ஆனால் அவரும் சாவி அவர்களுக்கு கொடுத்த பேட்டியில் சற்று மாறுபட்ட சிந்தனையை வெளிப்படுத்தியிருந்தார். ஹிந்தியால் கெடுதல் இல்லை என அவர் பேசியதைக் காண்கிறோம்.

திமுக பிரிந்து அது வளர்ந்த 1960 களில், காங்கிரஸ் எதிர்ப்பில் ராஜாஜி திமுக உறவு மலர்ந்து விரிந்தது.

“ மக்களுக்கு தேவைப்படுகிற காலம் வரையில், ஆங்கிலம் மாற்று மொழியாக எவ்வளவு காலத்துக்கு என்பது ஹிந்தி பேசாத மக்களிடத்தில் விடப்படவேண்டும்” என்கிற நேருவின் உறுதிமொழி நிலைக்குமா என்ற சந்தேக நிலையில் திமுக போராட்ட அறிவிப்பை செய்தது.

தோழர் கேடிகே தங்கமணி அப்போது எம் பி. ஈ வெ கி சம்பத் அவர்களும் எம் பி. நேரு சம்பத்தை சந்திக்க வர வேண்டுகிறார். சம்பத் தயங்கினார். தங்கமணி அவரை நேருவிடம் அழைத்துச் சென்றார். சம்பத் கடிதத்திற்கு, நேரு உடன் பதில் தந்தால், அதை எடுத்துப்போய், திமுக போராட்டத்தை கைவிட வைக்கலாம் என சம்பத் ஏற்கிறார். நேருவும் சந்தேகம் தேவையில்லை என்கிற நம்பிக்கையை எழுதி தந்தார். உடன் விமான பயணம் மூலம், சென்னை வந்து சம்பத் அண்ணாவிடம் எடுத்துச் சொல்லி போராட்டம் கைவிடப்படுகிறது.

உள்துறை அமைச்சர் சாஸ்திரி அவர்கள் 1965 ஜனவரி 26 ல் ஹிந்தி ஆட்சிமொழியாகும் என்று 1963ல் கொடுத்த அறிவிப்பால், அரசியல் சட்டம் கொளுத்துவோம் என திமுக 1963 இறுதியில் அறிவித்தனர்.

பெரியார் 1952ல் கூட ஹிந்தி எழுத்துக்களை அழிப்போம் என்ற போராட்டத்தைத்தான் மேற்கொண்டவர். ஆனால் 1960 களில் அவர் வேறுவகையில் பேசலானார்.

2-6-1963ல் " இந்தியா யூனியனாக இருக்கும்வரை ஹிந்தியை அசைக்க முடியாது. நாம் ஒண்டிக்குடி. அசைக்க வேண்டுமெனில் பலாத்காரத்தில் இறங்கவேண்டும். அவ்வளவு தூரம் போக இப்போது அவசியமில்லை. ஆகவே ஹிந்தியைப் பற்றி பேசுவது வீண் என்று முடிவு செய்து விட்டேன் " என்றார்

1965 போராட்ட காலத்தில் அவர் பேசியது

" ஹிந்தி எதிர்ப்பு என்ற பெயரில் நடைபெற்ற காலித்தனம்..தமிழ் நாட்டில் எங்கே ஹிந்தி இருக்கிறது - யார் கட்டாயப்படுத்தினார்கள்...ஆரம்பத்திலேயே நான்கு காலிகளை சுட்டு இருந்தால் , நாச வேலைகளும்,உயிர் சேதமும் உடைமைக் சேதமும் ஏற்பட்டிருக்காது..எதற்காக சட்டம் போலீஸ்..இது என்ன அரசாங்கம் வெங்காய அரசாங்கம் "

19-1-1965 ல் அவர் இவ்வாறு கடுமையாக சொன்னதைப் பார்க்கிறோம்

சுதந்திரா கட்சி, கண்ணீர்த் துளி கட்சி ஆகிய இரண்டையும் தடை செய்யுங்கள்..பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு போடுங்கள்

11-4-1965 சாவிக்கு ஆனந்த விகடன் பேட்டியில் பெரியார் இவ்வாறு கருத்து தெரிவித்தார்

" இப்போது ஹிந்தி எங்கே இருக்கிறது..சொல்லுங்கள்

எங்கே ஹிந்தி ஆட்சி மொழியாக வந்துவிட்டது..உங்களுக்குத்தான் ஆங்கிலம் இருக்கிறதே. இந்தியா ஒன்றாக இருக்க வேண்டுமானால் ஓர் ஆட்சி மொழி வேண்டியது தானே..ஹிந்திக்காரன் உங்களைப் போல ஆங்கிலத்தை நினைக்கவில்லையே..தமிழ் நாட்டுக்காரன் சொல்றபடி நடக்குமா? அது மக்களாட்சியா?

ஹிந்தி வந்தால் நீ இரண்டாந்தரக் குடிமகன் ஆகிவிடுவேன் என்று சொன்னால் , ஹிந்திக்காரன் ஆங்கிலம் வந்தால் மூன்றாந்தரக் குடிமகன் ஆகிவிடுவேன் என்று சொல்வான்..”

காந்தியின் எழுத்துக்கள் முழுமையாக, மறைக்கப்படாமல் எந்த வடிகட்டலும் இல்லாமல் கிடைப்பது போல, மக்களிடம் பெரும் அரசியல் செல்வாக்கு செலுத்தக்கூடியவர் எழுத்துக்கள் அனைத்தும் வெளிப்படையாக - அது இந்திய கம்யூனிஸ்ட் இயக்க எழுத்தானாலும்- திராவிட இயக்க எழுத்தானாலும்- அம்பேத்கரிய எழுத்தானாலும்- வலதுகளின் எழுத்தானாலும்- லிபரல் மற்றும் சோசலிஸ்ட்களின் எழுத்தானாலும் அனைத்தும் - இந்திய அரசியல் குறித்த மேம்பட்ட புரிதலுக்காக கிடங்காக கொட்டி வைக்கப்பட வேண்டும்.

எவர் குறித்தும் முரண் இல்லா uni dimensional understanding என்பது சரிதானா என்ற கேள்விக்கான நியாயம் , அவர்கள் எழுத்தில் மறைப்புகள் தராத publications or e publications மூலம்தான் சாத்தியமாகும். இதிலாவது மக்களுக்கு நியாயம் செய்திட சம்பந்தபட்ட இயக்கங்கள் கருணை காட்ட வேண்டும்...இந்த நேரத்தில் இது குறித்து இந்த சூழலில் இப்படியான நிலைப்பாடு என்கிற வரலாற்றுணர்வு உருவாக்கிட அரசியல் வழி செய்ய வேண்டும் என்பது விழைவு...

sep 21, 2023

ஆண்ட் ருஸ்-காந்தி

மதிப்பிற்குரிய C F ஆண்ட் ருஸ் முதல்முறையாக காந்தியை சந்திக்கும் காட்சி ரசிக்கத்தக்க ஒன்று. சுசிலா தனது மகாத்மா வால்யூம் 4 ல் அதைக்கொண்டு வந்திருப்பார்.

தென்னாப்பிரிக்கா சத்தியாகிரகம் மிக உச்சம் போய்க்கொண்டிருந்த நேரமது. கஸ்தூர் உட்பட பல பெண்களும் கைதாகி, தண்டனை முடிந்து வெளிவந்துகொண்டிருந்தனர். காந்தி, கல்லன்பாக் சிறை வாயில் சென்று வரவேற்று வருகின்றனர். காந்தி மனத்துயரில் இருந்தார். தன்னை நம்பி போராட்டத்தில் ஈடுபட்ட ஹர்பத் சிங் 75 வயது சிறையிலேயே மரித்துப்போனார்.

அந்தோணி முத்துவிற்கு குண்டு காயம், அவரது தந்தையோ சிறைக்கு வெளியே நடந்த துப்பாக்கி சூட்டில் சாய்ந்தார். சூர்ஜ்ஹய் பீனிக்சிலிருந்து அழைத்துப்போகும் போதே துப்பாக்கி குண்டால் துளைக்கப்பட்டதை அவரது துணைவியார் கண்ணீரும் கம்பலையுமாக காந்தியிடம் சொல்லிக்கொண்டிருக்கிறார். இளம் வள்ளியம்மா வெளிவந்து, சுகவீனமுற்று இறக்கப்போகும் தருவாயிலும், தன்னால் தியாகம் செய்யமுடிந்தால் பேறு எனச் சொல்கிறார்.

காந்திக்கு என்ன செய்வது - ஏதாவது தன்னுள் கிளர்த்தும் மாற்றத்தை தான் மேற்கொண்டாக வேண்டும் என்கிற தவிப்பு எழுகிறது. மக்கன்லால், இனி இந்த வக்கீல் மேற்கு அடையாள உடை வேண்டாம்- தமிழ் உழைப்பாளர் கட்டுகிற வேட்டி சட்டை போதும்- அதை எடுத்துவா என உடன் அந்த உடை முறைக்கு மாறுகிறார். அவர்களின் துக்கத்தை பகிர்ந்துகொள்ள என்னால் செய்யமுடிந்தது அதுதான் என்கிறார். ஜோல்னா பை ஒன்று தோள் ஏறுகிறது. அநேகமாக இந்த நாள் டிசம்பர் 19, 1913 ஆக இருக்கலாம்.

இந்த சூழலில்தான் , கோகலே நிதி வசூல் செய்து தென்னாப்பிரிக்க போராளிகளுக்கு அனுப்பும் முயற்சியில் ஈடுபடுகிறார். வெஸ்ட், போலக், கல்லன்பாக் என அனைவரும் சிறை என்றால் காந்திக்கு துணையாக நிற்க ஆங்கிலேயர் ஒருவர் இருக்கவேண்டும் என்கிற அவசியத்தை கோகலே உணர்கிறார். அப்போது பழக்கமாகியிருந்த ஆண்ட் ருஸ் பொருத்தமானவர் என அவரை தென்னாப்பிரிக்கா அனுப்புகிறார். அவரது கப்பலும் குறிப்பிட்ட நாளில் அல்லாது தாமதமாக வருகிறது. ஆண்ட் ருஸ் தன்னிடம் இருந்த சேமிப்பான 300 பவுண்டையும் கோகலேவிடம்

நிதியாக கொடுக்கப்போனார். ஆனால் கோகலே அன்று இந்திய மதிப்பில் ரூ 1000க்கான 75 பவுண்டை மட்டும் எடுத்துக்கொண்டார்.

ஜனவரி 2 , 1914 அன்று ஆண்ட் ருஸ் வந்தடைந்தார். டர்பனில் போலக், காந்தி (தனது மாறிய உடையுடன்) மற்றும் கூட்டமாக பலர் வரவேற்றனர். காந்தி முதலில் சென்று கைகுலுக்கி வரவேற்கிறார். போலக்கை பார்த்து(முன்பே இந்தியாவில் போலக்கை பார்த்து பேசியிருந்ததால்) கையசைத்த ஆண்ட் ருஸ் காந்தி எந்த சிறையில் இருக்கிறார், முதல் வேலை அவரை சிறையில் போய் சந்திப்பதுதான் என்கிறார். போலக் சிரித்துக்கொண்டே, நீங்கள் காந்தியை பார்த்தீர்களே, பார்க்கவில்லையா எனக் கேட்கிறார்.

ஆண்ட் ருஸ்க்கு, இந்திய மரபில் முதலில் சந்நியாசி எவரையாவது நிற்கச் சொல்லி வரவேற்பார்கள் போலும், அப்படி தன்னை முதலில் வரவேற்றவர் ஏதோ ஒரு சந்நியாசி எனக் கருதிவிட்டார். இதை சுசீலாவின் வரிகளில் காண்போம்.

Polak laughed and said, “ you have already met Mr Gandhi. He has been released. There he is”

Andrews was agreeably surprised. He looked at a man who appeared to be renunciation incarnate. His eyes, full of wonder and reverence , glanced at the man in front of him from head to foot. Then moving two steps back, he fell on his knees and touched his feet…it seemed as if long lost friends had come together. They were full of joy and felt as if they were already close friends”

மறுநாள் தென்னாப்பிரிக்க பத்திரிகைகள் தங்கள் விமர்சனத்தை வைத்தன. காந்தி முனிவராக இருக்கலாம் ஆனால் இந்தியர். அவர் காலில் புனித ஆண்ட் ருஸ் விழுந்து, தென்னாப்பிரிக்க வெள்ளையர் புகழை பங்கப்படுத்திவிட்டார் என்றனர். ஆண்ட் ருஸ் ஒரே வரியில் அந்த விமர்சனங்களை எதிர்கொண்டார். அவ்வரி I saw Christ in Gandhi.

இப்படி அவர்களின் முதல் சந்திப்பும் பெரு நட்பும் தொடங்கியது..வாழ்நாள் முழுவதும் நீடித்தது.

sep 20, 2023

ஆதி சங்கரர் - இ எம் எஸ்

தோழர் இ எம் எஸ் நம்பூதிரிபாட் மூத்த இந்திய மார்க்சிய அரசியல்வாதி மட்டுமல்ல. இந்தியாவின் மகத்தான மார்க்ஸிய சிந்தனையாளராகவும் அவர் வாழும் காலத்திலும், அவர் எழுத்துக்களின் வழி இப்போதும் உணரப்பட்டு வருபவர்.

ஆதி சங்கரர் அவர்களின் 1200 ஆண்டு கொண்டாட்டம் காலடியில் நடந்தபோது, மார்க்சியர்களும் ஆதிசங்கரர் தத்துவம் குறித்த செமினார் ஒன்றில் பங்கேற்றனர். தோழர் இ எம் எஸ் அவர்கள் , அந்த 1989 தருணத்தில் ஆய்வுக் கட்டுரை ஒன்றையும் எழுதியிருந்தார். அதன் தலைப்பு Adi Shankara and His Philosophy A Marxist View.

Left word பதிப்பகம் 2010 ல் இ எம் எஸ் அவர்களின் 16 கட்டுரைகளை இணைத்து History Society and Land Relations என்கிற புத்தகமாகக் கொணர்ந்தது. அப்புத்தகம் வந்தவுடனேயே நானும் வாங்கிவிட்டதாக நினைவு. அதில் சங்கரர் குறித்த இக்கட்டுரை இடம் பெற்றுள்ளது. அளவில் 12 பக்க கட்டுரைதான்.

இயக்கவியல் வரலாற்று பொருள்முதல்வாதம் பேசுபவர் இதுபோன்ற idealism சார்ந்த செமினாருக்கு - அது போன்ற விஷயங்களில் பங்கேற்கலாமா எனக் கேட்டுக்கொண்டு, பங்கேற்கலாம் - நமது பார்வையை வைக்கலாம் எனதெளிவுபடுத்தினார் இ எம் எஸ். ஆதிசங்கரரின் கருத்துமுதல்வாத சிந்தனை என்பதும் இந்திய ஞானம் என்கிற புரிதலுடன் கச்சிதமாக தன் விவாதத்தை அவர் கொண்டு சென்றிருப்பார்.

இந்திய பொருள்முதல்வாதம் உழைக்கும் மக்களை சார்ந்து நின்றால், கருத்து முதல்வாதம் ஆக உயர் தட்டிற்காக நின்று சமூகத்தை தங்கள் கட்டுக்குள் வைத்திருந்த பிராமண- சத்திரிய வர்ணங்களுக்காக, அவர்கள் சலுகைகள் வீழ்ந்துவிடாமல் காப்பதற்காக நின்றது என்கிற மார்க்சிய புரிதலை இ எம் எஸ் வைக்கிறார்.

இங்கு இ எம் எஸ் இரு வாதங்களில் உயர்ந்தது இது - தாழ்ந்தது அது எனப்பேசாமல், அவற்றின் முரண் மோதல் சமூக வளர்ச்சி என்கிற இயக்கவியல் அணுகுமுறையை எடுத்திருப்பார். அவர் வரிகளை கவனியுங்கள்

“Neither idealism nor materialism remains static, both are ever moving forward, negating each other, the struggle between the two in newer and newer forms is the law of development of human thought. There is therefore no question of materialism as such being superior to idealism, idealism as such being inferior “

இங்கு இ எம் எஸ் law of development of human thought என்பதன் அம்சமாக இந்திய கருத்துமுதல்வாத ஞானத்தை, அதை inferior எனச் சொல்லாமல், மெட்டிரியலிசம் என்பதுடன் அதன் தொடர் மோதலை புரிந்துகொள்ள சொல்லித்தருவதைக் காண்கிறோம்.

இந்தியாவில் இந்த மோதலில் ஆதிசங்கரரின் அத்வைதம் உள்ளிட்ட அவரது தத்துவ சிந்தனைகள், சார்வாகம் புத்தம் உள்ளிட்ட பொருள்முதவாத சிந்தனைகளை வீழ்த்த தலையாய பங்காற்றியதை இ எம் எஸ் எடுத்துச் சொல்கிறார். இ எம் எஸ் தருவதிலிருந்து சில வரிகள்

Adi Shankaracharya with his philosophy of Advaita Vedanta was the finest and most sophisticated exponent of this school of India’s idealist philosophy. He developed his teachings on Brahman to such an extent that it implied the denial of even God, he was denounced by his opponents as Buddha in disguise- prachchanna Buddha….

Shankara was and is still revered however, for the erudition with which he defeated the Buddhist philosophical trend

இந்திய கருத்துமுதல்வாத பொருள்முதவாத மோதலை இந்திய வகைப்பட்ட வர்க்கப்போராட்டத்தின் வகை என இ எம் எஸ் கருதுகிறார். இந்தியாவில் புத்தம் தோற்றதை the victory of dominant upper castes whose theoreticians championed idealism என இ எம் எஸ் முடிவிற்கு வருகிறார். டாக்டர் அம்பேத்கர் இந்த முடிவை முன்னரே எட்டியிருந்தார். புத்த வீழ்ச்சியும், சங்கர தத்துவ வெற்றியும் இந்தியாவில் அறிவியல் வளர்ச்சியை பாதித்தன என்கிற நீட்சியான முடிவிற்கு இங்கு கூடுதலாக இ எம் எஸ் வந்தடைகிறார்.

மேலும் தன் ஆய்வில் இ எம் எஸ் வந்தடையும் புள்ளி

..the defeat of oppressed castes at the hands of the Brahminic overlordship, of materialism by the idealism, constituted the fall of India’s civilisation and culture which in the end led to the loss of national independence

இன்னும் அழகாக தன் மார்க்சிய மொழி கூட்டி இ எம் எஸ் சொல்கிறார். இது ஏதோ தத்துவம் வென்றது என்பதல்ல, அதில் victor - vanquished என்பதெல்லாம் இரண்டு தத்துவமல்ல இரு சமூக வர்க்கங்கள்- the dominant and oppressed castes using the philosophy as their arsenal.

The victory of Shankara and his philosophy was the victory of the Brahmin and other dominant castes, the defeat of the rest of Indian society. இந்த புரிதலில் பிராமண மற்றும் மேலாதிக்க சாதிகள் என்ற சொற்றொடரை இ எம் எஸ் பயன்படுத்தியிருப்பதை பார்க்கமுடியும்.

எவர் dominant castes என்பதை குறிப்பிட்ட அந்த சாதியினரின் அரசியல் அதிகார பலம், தேர்தலில் அதன் பங்களிப்பு, சொத்து பொருளாதார பலம், அவ்வூரில் கிராமத்தில் அவரின் பயமுறுத்தல் index காட்டிவிடலாம்.

இ எம் எஸ் இப்படி முடித்திருப்பார்

" Let me conclude: Shankara was one of the tallest of India's - world's idealist philosophers, his advaita vedanta is one of the richest contributions India has made to the treasury of human knowledge "

நமது பொருள்வாத சிந்தனையிலும் பல genius இருந்தாலும் , சமமற்ற போட்டியால் அவர்கள் வெற்றிபெறமுடியாமல் போனதால் ஆயிரமாண்டு பின்னடைவு பிரிட்டிஷ் ஆட்சி என அவர் பேசுகிறார்- the beginning of a millennium- long age of intellectual and socio political backwardness which culminated in the establishment of British rule in our land. இந்த இ எம் எஸ் வாக்கியங்களை கவனித்தால் அவர் மில்லினியம் கால பிற்பட்டத்தனம் என்கிற சொற்றொடரை- முகலாய காலத்தையும் சேர்த்தே பேசியிருக்கிறார் - அதை வெளிப்படையாக சொல்லாமல் காலத்தைச் சொல்லி subtle ஆகச் செல்வதைக் காண்கிறோம்.

வலது சிந்தனையாளர்கள் தங்களுக்கானதான பகவத் கீதை, இதிகாசங்களை சமஸ்கிருத ஸ்லோகங்களுடன் அதன் மாநிலவாரி மொழிபெயர்ப்புகளுடன் ஏராளம் கொண்டு செல்கின்றனர். அப்படி அவர்கள் பெருமிதமாக காட்டிக்கொள்ளும் சமஸ்கிருதம் அல்லது இந்தி மொழியில் நாத்திக மற்றும் பொருள்முதல்வாத, ஒடுக்கப்பட்டவர்க்கு ஆதரவான கருத்துக்கள் ஸ்லோகங்கள் இருந்தால் அவற்றை அதே மொழியில் தந்து மாநில மொழியில் அர்த்தம் எழுதி எடுத்துச் செல்லவேண்டிய பணி நடைபெறுகிறதா என அறியமுடியவில்லை.

இ எம் எஸ் பேசியது போல the law of development of human thought என்பது பல்வேறு மொழிகள் தொடர்பில் தான் பெறமுடியுமே தவிர, எவர் கதவடைப்பிலும் அந்த போராட்டம் மற்றும் வளர்ச்சி நிகழாமல் போய்விடும். எனவே மொழி கதவடைப்புகளை ஆர்வம் உள்ளவர்களாவது - சிறிய அளவிலாவது தவிர்த்து, மானுட சமதை சிந்தைக்கு , dignity க்கு உகந்த கருத்துக்களை கொண்டுவந்து அவரவர் மொழியில் சேர்ப்பதும், பிற மொழிகளுக்கு உகந்த சிந்தனைகளை கடத்துவதும், இந்த போராட்டங்கள் ஊடாக இணக்கமான சமூகம் கட்டப்படுவதற்கும் துணை நிற்கட்டும்.

செப் 19, 2023

சமூக ஒழுங்காற்றில் அரசியல் அமைப்பு சட்டம்

விடுதலை அடைந்த இந்தியா தன் சமூகத்தை ஒழுங்காற்றிக்கொள்ள தனது பழைய மூட்டைகளையெல்லாம் ஓரம் கட்டி வைத்துவிட்டு, அரசியல் அமைப்பு சட்டம் ஒன்றை இயற்றி அதன் வழியில் நடக்க முயற்சிக்கலானது.

இந்தியா தான் சுமந்து வந்த ஆயிரமாயிரம் காலத்து அம்சங்களையெல்லாம் ஓரளவு விவாதித்து , அன்று காணப்பட்ட உலகின் ராஜ்ய ஆள்வினைக்கான கோட்பாடுகளை உள்வாங்கி, பிரிட்டிஷ் வைத்திருந்த 1935 சட்ட அம்சங்களையும் கணக்கில்கொண்டு, அரசியல் அமைப்பு அசெம்பிளியில் விவாதித்து, டிராப்டிங் குழு சார்பில் டாக்டர் அம்பேத்கரின் விளக்கங்களைப் பெற்று தனக்கான அரசியல் அமைப்பு சட்டத்தை உருவாக்கி , குடியரசும் ஆனது. தன் குடிமக்களுக்கான அடிப்படை உரிமைகளை மட்டுமல்லாது (citizen rights) மக்களுக்கான உரிமை people's rights என்பதையும் வரையறுத்துக்கொண்டது.

சரித்திரம் குறித்த ஆயிரம் முரண்பட்ட வரையறுப்புகள் இருந்தாலும், அதன் பெருமை பிரஸ்தாபங்கள் இருந்தாலும், இந்திய குடிமகன் என்ற அடையாளத்தை அரசமைப்புப்படி இந்த சரித்திர அளப்புகள் மாற்றமுடியாது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரான கஜினி பாபர் வாரிசுகள் என்றோ- வெளிக்காரர் என்றோ, கைபர் கணவாய் வந்த நாடோடிகள் வெளிக்காரர் என்றோ - ஆரியர் திராவிடர் பேசும் சரித்திர அம்சங்களைக்கொண்டோ, மத பெருமைகளைக்கொண்டோ இங்கு இந்திய குடிமகனின் பிறப்பு பதிவிடப்படுவதில்லை. அவரது உரிமைகளும், கடமைகளும் அரசியல் அமைப்பு சட்டத்தின் பாற்பட்டவை என்பது இந்நாள்வரை , நீதிமன்றம் போயாவது காத்துக்கொள்ளும்படிதான் இருக்கிறது.

அதேபோல் சமயம் சார்ந்த அல்லது மனு நீதி புருஷ சூக்தம்- வேத உபநிட - புராண வழி பெருமிதங்கள் - அல்லது பேசப்படும் இழிவுகள் சார்ந்தோ - அல்லது குரான், பைபிள் போன்றவை சார்ந்தோ இன்றைய இந்திய குடிமகனுக்கு பிறப்பு சான்றிதழ் வழங்கப்படுவதில்லை. மருத்துவ வசதியற்ற பகுதிகள் தவிர , பெரும்பாலோர் மருத்துவ மனையில் தான் பிறக்கின்றனர்.பிறப்பு குறித்து பேசும் வேறு அபத்தங்கள் எல்லாம் ஒதுக்கப்படவேண்டியவையே. இன்றைய இந்தியாவில் ஒருவரது உரிமைகளும் கடமைகளும் அரசியல் அமைப்பு சட்டத்தின்பாற்பட்டவை என்பது இந்நாள்வரை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்திய அரசியல் அமைப்பு சட்டம் புனித புத்தகம் இல்லையென்றாலும், அரசியல் பொருளாதாரம் சமூக அசைவுகளுக்கான அடிப்படையாக இருக்கிறது. அதன் செல்லத்தக்க தன்மை மட்டுமே நீதிமன்றத்தின் உச்ச பேசுபொருளாகவும் இருக்கிறது. ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டிய, ஒவ்வொரு வீட்டிற்கும் அவரவர் தாய்மொழியில் தரப்பட்டிருக்கவேண்டிய ஆவணமது. தெருதோறும் அது குறித்த விழிப்புணர்வு சென்றிருக்க வேண்டும். அதன் ஷ்ரத்துகள் எல்லாம் பல்வேறு மொழிகளில் இசைவடிவம் பெற்று popularise ஆகியிருக்கவேண்டும். அடிப்படை உரிமைகளும் கடமைகளும் வாழ்வியல் போக்கினூடாக உணரப்பட்டிருக்கவேண்டும்.

அரசியலில் வேட்பாளராக நிற்கப்போகிறவர்களுக்கு இருக்கும் தகுதிகளில் ஒன்றாக அவர் அரசியல் அமைப்பு சட்டம் குறித்த பயிற்சி வகுப்புகள் - இத்தனை நாட்கள் என்ற வரையறை கூட இருந்திருக்கவேண்டும்.

None is low none is high என அடிக்கடி காந்தி பேசிய உணர்வின் வெளிப்பாட்டை, Equality before law என்கிற உணர்வை , அம்பேத்கர் வற்புறுத்தி பேசிய fraternity என்கிற உணர்வை - அகில் பில்கிராமி போன்றவர் பேசிவருகிற liberty- equality- fraternity இடையிலான டென்ஷனை இணைக்கப்படுத்தவேண்டிய அவசியத்தை நமது constitutional spirit- constitutional morality மூலம் சரிபடுத்திக்கொள்ளவேண்டிய தேவை அதிகமாக உணரப்படவேண்டிய நிலையில் அரசியல் திசை கொண்டிருக்கிறது.

இதை வெறும் constitutionalist தன்மை என்று சுருக்கி புரிந்துகொள்ளவேண்டாம். பல்வேறு இழுவைகளால் வரலாறும், கம்யூனிட்டி பெருமிதங்களும்- இழிவுகளும், மத சாதி சுய அபிமானங்களும் இன்றும் நிலவும் சமூகம் ஒன்றில் - குறைந்தபட்ச ஏற்பின் இடமாக அனைவருக்கும் இன்றுவரை இருப்பது இந்திய அரசியல் அமைப்பு சட்டமாகவே உள்ளது.

அரசியல் கட்சிகள், சமூக இயக்கங்கள் தங்கள் மொழியை அரசியல் அமைப்பு சட்ட மொழிகிடங்கிலிருந்து நிரப்பிக்கொள்ளவேண்டிய தேவை அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. ஒரு கட்சி அல்லது ஒரு தலைவர் அல்லது ஓர் இயக்கம் அதன் ideology என்பதெல்லாம் நம்மை tired ஆகியிருக்கலாம் - போதுமப்பா இனி தாங்காது என்கிற உணர்வை உருவாக்கியிருக்கலாம். அதேபோல் ஏதோ ஒரு சமயத்தின் மொழி அல்லது சமயங்களின் மொழிகள் , ஒரு சாதியின் மொழி அல்லது சாதிகளின் மொழிகள் நம்மை tired ஆக்கியிருக்கலாம்.

ஆனால் அரசியல் அமைப்பு சட்டம் பல்வேறு திருத்தங்களை கண்டபோதும், இன்னும் நம்மை tired ஆக்கவில்லை. இங்கு நம்மில் நுழைந்த பல்வேறு அடையாளங்கள்

போல் அது இன்னும் பொது அடையாளமாக, awareness ஆக , பொது புத்தியில் போய் உட்காரவில்லை.

The Meaning of equality என்கிற லோகியா எழுதிய கட்டுரை ஒன்றை முன் எப்போதோ ஜனதா இதழில் படித்த நினைவு. Constitutional morality நிறைந்த அரசியல் நம்மிடம் நிரம்பி வழியும்போது, பதட்டங்கள் குறைந்த , பரஸ்பர நம்பிக்கை கொண்ட, இணக்க சமூகத்தை நாம் உணரலாம் எனத்தோன்றுகிறது.

காந்தியை புறந்தள்ளுவது நமது morality மீது நாம் தொடுத்துக்கொள்ளும் தாக்குதலாகவே அமைந்து வருகிறது என்ற உணர்வு மரத்துப்போவது நல்லதல்ல.

sep 18, 2023

மொழியும் அறமும்

சமத்துவ சிந்தனை என்றால் அது மேற்கிலிருந்து குறிப்பாக பிரஞ்சு, ஆங்கில, ஜெர்மானிய சிந்தனையாகத்தான் இருக்கவேண்டும் என்கிற எண்ணம் பரவலாக இருக்கிறது. அப்படி வளர்ந்தவர்களில் நானும் ஒருவன்.

மனிதன் சமதையாக நடத்தப்படவேண்டியவன் என்கிற அறச் சிந்தனை தமிழ் பாடல்களில் காணக்கிடைக்கிறது. எச்சிந்தனையில் எம்மொழியில் , இன்னும் உலகின் மூத்த மொழிகளாக அறியப்படுகிற தமிழ், சமஸ்கிருதம், கிரேக்க , லத்தீன் இன்னும் வேறு எந்த மூத்த மொழி வழி சிந்தனையில் இருந்தாலும் அவற்றை கொள்ளத் தக்கதாக எடுத்தாளவேண்டும். இந்த எண்ணப் பரவல் வேகப்படுத்தப்படவேண்டும். எழுத்துவடிவம் கூட இல்லாத மொழிக்கூட்டத்தில் அது தென்பட்டாலும் எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் அமர்த்யா சென் அவர்களிடம் சமஸ்கிருதம் குறித்த உரையாடல் நடந்தபோது, அம்மொழியை தான் சிறு வயது முதலே பயில விரும்பியது ஏன் என்பதை சுட்டிக்காட்டினார். அதன் மதம் சார்ந்த எழுத்துக்களையும் தாண்டி, அதன் சார்வாகர் - புத்த எழுத்துக்களையும், அறிவியல் பாங்கில் அமைந்த எழுத்துக்களையும் தான் தேடி அறிந்ததாகவும் அவை ஏராளம் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். இப்படிப்பட்ட அந்த so called தேவ பாஷையில் எழுதப்பட்டுள்ள மானுட சமத்துவ உயர் சிந்தனைகளை அம்மொழி அறிஞர்கள் தொகுத்து ஆங்கில வழியிலோ, வாய்ப்பிருந்தால் பிற இந்திய மொழிகளிலோ தருவது நல்லது-பயனுள்ளதாக இருக்கும். இங்கிருந்து இந்திக்கும் பெரியார் எழுத்துக்கள் போய்க்கொண்டிருக்கின்றன.

எந்த மொழியையும் அது உருவாக்க விழையும் இணக்க சிந்தனைகளிலிருந்து புரிந்துகொள்ள முயற்சிப்பது நல்லது. அதன் சமய மற்றும் சாதி ஏற்றத்தாழ்வு மொழியாடல்களுக்கு மாற்றாக, அதே மொழியில் காணப்படும் இணக்க சிந்தனைகளை பரவலாக்குவது நல்லது. ஒரு மொழியால் தனது சமயம் சார்ந்த மொழியில் மானுட கௌரவம் உயர்த்தி பிடிக்கப்பட்டிருந்தால், அந்த சமய மொழியும் நல்ல பலனைத் தரமுடியும். அதில் சமய உயர்வு என்கிற பெருமிதத்தைவிட, மானுட நேயம் என்பது உயர்ந்து நின்றால் நலம். அன்னப்பறவையை அடிக்கடி காந்தி அழைப்பதைக் காண்கிறோம். கொள்வதைக் கொள்ளல் என்பதற்காக அவர் அதைச் சுட்டிக்காட்டுகிறார்.

சமூகம் தனக்கான அற சிந்தனைகளை, மானுடத்தின் அன்பை அரவணைப்பை போற்றும் சிந்தனைகளை தமிழைப் போலவே , பிற மொழிகளிலும் சிந்தித்து தொகுத்து வைத்திருக்கிறது. எந்த சமூகமும் நடைமுறையில் மத, சாதிய வேறுபாடுகளையும், தாழ்த்துதலையும், வெறுப்பையும் செய்துகொள்ளும்போது , அம்மொழி அதற்கான சுய சாதி சுய மத பெருமிதங்களையும் மொழி கட்டுமானத்தில் கொணர்ந்து , அதற்கான விரிவுரையாளர்களையும் வைத்துக்கொள்கிறது. அவர்களை போஷிப்பதன் மூலம் தங்கள் பெருமித தூய சாதி, தூய மதக் கட்டு குலையாமல் பாதுகாத்துக்கொள்ளலாம் என அப்பாவித்தனமாக நம்பியும் வினையாற்றுகிறது.

சிறு வயதில் படித்த the heritage we carry forward - the heritage that we renounce என்பது இன்றும் என்னுள் பதிந்துள்ளதை உணரமுடிகிறது. செய்யக்கூடிய செயலால் சமூகத்தின் ஓரம் சார்ந்த கடைநிலை மனிதர்க்கு பயனுண்டா எனப்பார் என்கிற மந்திர தாயத்தை காந்தி தன் களப்பணியாளர்களுக்கு தந்து சென்றார்.

இந்திய சமூகம் அரசியல் வழியாக பொருளாதார- சமுதாய ஏற்றத்தாழ்வு உணர்வுகளை சரி செய்யமுடியும் என்கிற நம்பிக்கையுடன் விடுதலை வாயிலில் நுழைந்தோம். முன்னேறவேயில்லை என்று நாம் எதிர்மறையாக அளவிட வேண்டியதில்லை. முன்னேற்றம் கடைக்கோடிக்கு போகவில்லை என்கிற புரிதல் இருந்தாலும் , ஏன் என்பதற்கு பல முரண்பட்ட பதில்களை அரசியல் அரங்கில் பெற்று வருகிறோம். 'மாரல்' என்கிற அறச்சிந்தனையில் நாம் கீழிறங்கி வருகிறோமா என்கிற அய்யப்பாடு ஏற்படுகிறது.

இந்திய சிந்தனை என்கிற அனைத்து மொழி சமூக கூட்டு முயற்சியில் சமதையான வாய்ப்பு- மேம்பட்ட இரட்டை அளவுகோல்களை தவிர்த்துக்கொண்ட அனைத்து மட்டங்களிலும் ஜனநாயக உணர்வும் செயல்பாடும், அவரவர் கலாச்சார கூறுகளில் நிலவும் ஏற்றத்தாழ்வான மொழிவுகள் மற்றும் உணர்வுகளை களைதல் என்கிற பயிற்சி தேவைப்படுகிறது.

Hatred cannot be eradicated by doubling or squaring or ,multiplying hatred in turn. இன்றைய அரசியல் மொழியாடல் தவறவிட்ட அம்சமாகவும் இது இருக்கிறது.

செப் 17, 2023

சஞ்சீவ் சன்யால் ஏழு நதிகளின் நாடு

சஞ்சீவ் சன்யால் புரட்சிகர குடும்ப பின்னணி கொண்டவர். இந்திய பொருளாதார அறிஞர். இந்திய வலதுசாரி சிந்தனையை முன்னெடுப்பவர். இந்திய புவி இயல் குறித்தும் , அதன் வரலாற்றில் ஓர் ஒருமையை - கலாச்சாரத்தை காட்ட முடியுமா என ஆய்வு செய்து வருபவர். பிரதமர் பொருளாதார ஆலோசனை குழுவில் இடம்பெற்றவர்.

எஸ் என் சன்யால் என்கிற பழம் பெரும் விடுதலை போராளி அந்தமான் சிறையில் அவதிப்பட்டவர், அனுசீலன் சமிதி சார்ந்தவர், ஹிந்துஸ்தான் புரட்சிகர அமைப்பிற்கு மானிபெஸ்டோ எழுதி ஆசாத், பகத்சிங் போன்றவர்களுக்கு முன்னோடியாக இருந்தவர். அந்த குடும்பம் சேர்ந்தவர்தான் இன்றைய இளம் சஞ்சீவ் சன்யால்.

சஞ்சீவ் சன்யால் எழுதிய Land of Seven Rivers என்கிற புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பை சந்தியா பதிப்பகம் 2016 ல் கொணர்ந்தனர். இதை தமிழகம் அறிந்த மொழிபெயர்ப்பாளர் தோழர் அக்களூர் இரவி எனக்கு 2016 மே மாதமே வாங்கி, அன்புடன் தந்திருந்தார். சன்யாலின் பேட்டி, உரைகளை கேட்டுவந்த எனக்கு சஞ்சீவின் வலது சாயலை புரிந்துகொள்ள முடிந்ததால் அவரின் indian Renaissance , Land of seven Rivers படிப்பதை தள்ளிப்போட்டுக்கொண்டிருந்தேன்.

வலதில் சில இளம் எழுத்தாளர்கள் இன்று பரவலாக போய்க்கொண்டிருக்கின்றனர். அவர்கள் விரிவான வாசிப்பை கொண்டவர்களாகவும் இருக்கின்றனர். விக்ரம் சம்பத், சாய் தீபக், அரவிந்தன் நீலகண்டன், மீனாட்சி ஜெயின், சஞ்சீவ் சன்யால் , ராகேஷ் சின்ஹா, ஹர்ஷ் மதுசூதன் போன்றவர்களை படித்து அவர்களின் ஆக்ரோஷத்தை இன்றைய அரசியலின் போக்குடன் புரிந்துகொள்ளவேண்டியிருந்தது. இந்த முயற்சி தோழர் இரவி கொடுத்த 'ஏழு நதிகளின் நாடு' எடுத்து படிக்க வைத்தது.

இந்த புத்தகம் தெற்கு பகுதியையும் குறிப்பாக தமிழகத்தையும் தொடாமல், இந்திய வரலாற்றை புவியியலை வடக்கின் ஒன்றாக சுருக்கக்கூடாது என்கிற புரிதலை கணக்கில் எடுத்துக்கொண்டுள்ளது. சோழர்களின் பராக்கிரமம் பேசப்படுகிறது. இந்த புத்தகம் இந்தியர்களுக்கு பண்டைய காலத்திலேயே வரலாற்றுணர்வு இருந்துள்ளது என்பதைச் சொல்ல விழைகிறது. அவர்கள் கொண்டாடும் தொடர்ச்சியை காட்ட விழைகிறது.

வால்மீகி இராமயண ஸர்கம் ஒன்றை பாலகாண்டத்தில் வாசித்தபோது ஒரு செய்தியை அது தந்தது. வருண பிரிவினைகள் நிலவியதை அது உறுதிபடுத்தியுள்ளது. அதே நேரத்தில் , தசரதன் குழந்தைகள் வேண்டி வசிஸ்ட்டர் மேற்பார்வையில் அஸ்வமேத யாகம் நடத்தியபோது இரு செய்திகள் நமக்கு கிடைக்கின்றன. அனைத்து வர்ணங்களை சார்ந்தவர்களையும் எவருக்கும் மரியாதை குறையாமல், வசதிகள் செய்துகொடுத்து யாகத்திற்கு அழைத்து உபசரிக்கவேண்டும். மற்றொரு செய்தி, யாகத்திற்கு சரயு நதிக்கரைக்கு தென்னாட்டு அரசர்களையும் அழைக்கவேண்டும். வர்ண எல்லைக்கு அப்பாற்பட்டவர்கள் குறித்த செய்தியில்லை.

சஞ்சீவின் இந்த புத்தகம் இந்திய புவியல் இயற்கையால் எவ்வித கட்டுமானங்களை பல்வேறு சீற்றங்களை எதிர்கொண்டு பெற்றது என்கிற வரலாற்றை தொட்டுக்காட்டுகிறது. இயற்கையின் இழுப்பில், மக்கள் எவ்வித வாழ்க்கையை அமைத்துக்கொண்டார்கள் என சில ஊகிப்புகளுடன் தன்னை இந்த புத்தகம் நகர்த்திக்கொள்கிறது.

ஏன் பாரதமானது- புத்தர் சாரநாத்தின் முக்கியத்துவம் - அசோகர், முகலாயர் காலம் என நகர்ந்து பிரிட்டிஷ் காலம் வரை செல்கிறது. சரஸ்வதி நதி, வணிக கப்பல்களின் பெருமிதம், ஹரப்பாவின் எச்சமான இன்றும் உள்ள சாயல் என இப்புத்தகம் சொல்ல முன்வருகிறது.

இந்திய வரலாறு வெறும் லீனியர் தன்மைகொண்டதல்ல - பல திருகல்கள் கொண்டது என்ற எண்ணத்தை உருவாக்க விழைகிறார் சஞ்சீவ். ரிக் வேத காயத்ரி பல காலம் கடந்தும் இன்றும் பிராமண குடும்பங்களில் சொல்லப்படுகிறது. ஓ ஒளிமிக்க சூரியனே சுவர்க்கத்தையும், பூமியையும் ஒளிமயமாக்கும் நீ எனது மனதுக்கு ஆன்மாவுக்கும் ஒளியைக்கொடு என்று தானே அது இறைஞ்சுகிறது என தன் பார்வையைக் கொடுக்கிறார் சஞ்சீவ்.

158 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியா ஆப்ரிக்காவிலிருந்து பிரிந்திருக்கலாம் என்பதை சஞ்சீவ் ஏற்கிறார். குஜராத் பகுதியில் டைனோசர் எச்சங்கள் காணப்பட்டதை சொல்கிறார். இந்திய நிலப்பரப்பு ஆசியா நோக்கிய நகர்வில் - எரிமலை குமுறல்களால்தான் தக்காண பீடபூமி உருவானதை சொல்கிறார்.

50 மில்லியன் ஆண்டுக்கு முன்னர்தான் இமயமலை திபேத் பீடபூமிகள் உருவாகியிருக்கலாம் என்பதும் சொல்லப்படுகிறது. இதனால்தான் வடக்கின் பெருமையாக, இந்தியாவின் பெருமையாக காட்டப்படும் கங்கை சமவெளி

உருவாக்கமும் நிகழ்ந்தது. ஆசிய யானைகள் 4 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியிருக்கலாம். புலி மூதாதையர் 20 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் சைபீரியாவில் இருந்திருக்கலாம். வங்காள புலி அறியப்பட்டு 12 ஆயிரம் ஆண்டுகள் இருக்கலாம்.

ஆப்ரிக்க மனிதன் இரண்டு லட்சம் ஆண்டிற்கு முன் தோன்றினானாம். தென்மேற்கு ஆசியாவில் இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னரே மனித நடமாட்டம் இருந்திருக்கவேண்டும். ஆப்ரிக்காவிலிருந்து 70 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மனித கூட்டம் அரபிய பகுதிகளுக்கு வந்திருக்கலாம். சுமத்ரா பகுதியில் எரிமலையால் 70 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய ஹோமோனிட் அழிந்து போயிருக்கக்கூடும்.

ஆஸ்திரேலியாவிற்கு மனிதர்கள் நுழைந்து 40 ஆயிரம் ஆண்டுகள் ஆகியிருக்கலாம். இந்திய பழங்குடியினருக்கும் இவர்களுக்கும் மரபுவழித்தொடர்புகள் இருக்கிறதாம். மத்திய இந்தியாவில் பீம்பேத்கா எனும் இடத்தில் ஆதிகால மனித எச்சங்கள் கிடைத்துள்ளதாம்.

இந்தியாவில் ஆரியர் கிமு 1500 ல் வந்து , சிந்துவெளி திராவிட நாகரீகத்தை அழித்ததாக சொல்லப்பட்டுவருகிறது. மிகப்பெரிய ஆக்ரமிப்பு படையெடுப்பு என்பதை அகழ்வாராய்ச்சி உறுதி செய்யவில்லை என சன்யால் கருதுகிறார். ஹரப்பா திடிரென உருவாகவும் இல்லை - திடிரென அழியவும் இல்லை. முக்கிய நதியின் வறட்சிதான் மெதுவாக ஹரப்பா அழிய , மக்கள் வெளியேற காரணம் என சன்யால் ஊகிக்கிறார்.

இந்தியாவில் தூய இனங்கள் என்று எதுவும் இல்லை. இன்று இந்தியாவில் காணப்படும் இனமரபுகளும் சாதிகளும் பலவித ஜீன்களின் கலப்பே என்கிற முடிவிற்கு சஞ்சிவ் வருகிறார். genetic distribution pattern பரந்து இருக்கிறதாம். வட இந்திய ஜீன்களில் 70 சதம் காஷ்மீர்பண்டிட், சிந்தி மக்களிடம் என்றால் 40 சதம் தென்னிந்திய மக்களிடம் காணப்படுகிறதாம். எனவேதான் தூய வட இந்திய அல்லது தென் இந்திய இன மக்கள் என்பதில்லை என சொல்லவேண்டியுள்ளது என்கிறார் சன்யால்.

திராவிடர்களின் அரசன் தான் மனு என்பதை சன்யால் ஏற்கிறார். இந்தியர் கலப்பினம் கூட்டம். அனைத்துவித வடிவ அளவு வேறுபாடுகள் கொண்டவர்கள் என்பதை மரபியல் நிருபித்து வருகிறதாம்.. R1 a 1, R 1 b என்கிற ஜீன் வகையில் முன் சொல்லப்பட்டது தான் பெரும்பான்மை இந்தியர்களுக்கானதாம்..பின் சொல்லப்பட்ட ஜீன் மரபு மிகக் குறைவாம்.

மொழியை அடிப்படையாகக் கொண்டு சரித்திரச் சிக்கல்களுக்கு தீர்வு காண்பதை சன்யால் ஏற்கவில்லை. அகழ்வாய்வு, மரபியல் வழி புரிதல் வேண்டும் என்கிறார்.

வாய்ப்புள்ளவர் படித்துப்பார்க்கலாம். தமிழில் தர சிவ முருகேசன் உழைத்துள்ளார். ஆங்கில நூலை நான் படிக்காததால் மொழி பெயர்ப்பின் சிறப்பை சொல்லமுடியவில்லை. தமிழில் வேகமாக போகக்கூடிய மொழி இருக்கிறது..

sep 16, 2023

மேகநாத் தேசாய்- கீதை ஆய்வு

Who wrote Bhagavad Gita என்கிற மேகநாத் தேசாய் ஆய்வு நூல் 190 பக்கங்கள் கொண்ட சிறிய நூல்தான். ஆனால் அடர்த்தி அதிகம். மார்க்சியர் நாத்திகர் என்பதால் அச்சிந்தனை அளவுகோலில் கீதாவின் ஸ்லோக பாடல்களை அவர் அளந்துள்ளார்.

கீதா குறித்து ஆதரவான மற்றும் கடும் விமர்சனம் கொண்ட ஏராள புத்தகங்கள் வந்துள்ளன. இங்கு தேசாய் கீதாவை மூன்று வெவ்வேறு காலத் தேவைக்கேற்ப மூன்று பேர் எழுதி , அது இன்றைய தோற்றத்தைப் பெற்றிருக்கலாம் என்கிற டாக்டர் காயிர் கருத்தை ஏற்கிறார்.

தெலாங் இதை ஏற்கவில்லை. பகவத் கீதையை முதலில் ஆங்கிலத்தில் கொணர்ந்த முதல் இந்தியர் தெலாங்தான். கீதாவின் பாடல்களில் பல முரண்கள் இருப்பதை தேசாய் கொணர்ந்து காட்டுகிறார். நிர்வாணா என்பது பிராமண கருத்தாக்கமல்ல, அது புத்த தாக்கத்திலிருந்து வந்தது

டாக்டர் காயிர் ஆய்வில் கீதாவின் முதல் 6 அத்தியாயத்தில் பெரும்பான்மை பாடல்கள் முன்பே 600 BCE - சுமார் 126 பாடல்கள் எழுதப்பட்டிருக்கலாம். புத்தத்திற்கு முந்திய உபநிடத கருத்துக்கள் ஈர்ப்பில் இவை நடந்திருக்கலாம்.

இரண்டாவது கர்மா சுட்டப்பட்ட காலம். இந்த ஆசிரியர் 119 பாடல்களை எழுதியிருக்கலாம் . அத் 8, 13, 14, 15, 17 இவரது பாடல்களாக இருக்கலாம்.

மூன்றாவது ஆசிரியர் அனைத்தையும் தன் பங்கிற்கானதைச் சேர்த்து இறுதிபடுத்தியவராக இருக்கலாம். அவர் அத் 7, 9-16ல் சில பாடல்கள் எழுதி இன்று காணப்படும் 700 பாடல்களாக அதை உருமாற்றியிருக்கக் கூடும். இவர்தான் பக்தி அம்சத்தை சேர்த்து இந்த பிரதியை பரவலாக்க முயற்சித்தவர் என்பது காயிர் ஆய்வு. மேலும் காயிர் ஆய்வில் அன்று கிருஷ்ணா, நாராயணன் கோபாலன் என்ற இணைப்பு பெயர்களை பெறவில்லை என்பதும் சொல்லப்படுகிறது.

காயிரின் ஆய்வில் மிக முக்கிய அம்சம் 'தர்மா' என்கிற பதம் முதல் ஆசிரியரால் பயன்படுத்தப்படவில்லை. இரண்டாவது ஆசிரியர் மூன்று பாடல்களில் மட்டுமே அப்பதத்தை 18.31, 18.32, 18.34 ல் பயன்படுத்தியுள்ளார். புகழ் வாய்ந்த yada yada hi dharmasva என்கிற 4 வது அத்தியாய 7 ஆம் பாடலை மூன்றாவது ஆசிரியர்

எழுதியிருக்கலாம். அவர் தான் தர்மா என்கிற பதத்தை 24 முறை 18 பாடல்களில் எடுத்தாண்டுள்ளார்.

யதா யதா ஹி தர்மஸ்ய க்லானிர்பவதி பாரத

அப்யுத்தானமதர்ஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம்யஹம்

எனச் செல்லும் இப்பாடலுக்கு அறம் அழிந்து மறம் மேலெழும்போதெல்லாம் என்னை நான் பிறப்பித்துக்கொள்கிறேன் என கிருஷ்ணன் அர்ஜூனனிடம் ஞானகர்மம் போதிப்பதாக பொருள் சொல்லப்படுகிறது. திருப்பராய்த்துறை ஸ்ரீமத் பகவத் கீதை வெளியீட்டில் பக் 240 ல் இதைக் காணலாம்.

புத்த சிந்தனைகள் பரவிய காலத்தவராக இரண்டாவது ஆசிரியர் இருந்திருக்கவேண்டும் என தேசாய் ஊகிக்கிறார். காயிர் Trikala Gita படி மூன்றாவது ஆசிரியர்தான் இன்று காணப்படும் பாடல்களில் 455 அளவில் தந்தவர் என முடிவிற்கு வருகிறார்.

தெலாங் multiple authorship என்பதை ஏற்கவில்லை. கோசாம்பியின் மேற்கோள் ஒன்றை தேசாய் காட்டுகிறார்

When Guptas arrived on the scene, they fostered the return of political and religious power into the hands of the Brahmans class, and this allowed for the revival of Brahminic religious ideas and the establishment of what we now call Hinduism

அத் 2.42- 2.46 பாடல்களில் ஒருவகை வேத மறுப்பு சிந்தனை இடம் பெற்றதாக வியாக்கியானம் செய்கிறார் தேசாய். இங்கு தேசாய் எழுதியிருப்பது

The successive verses 2.47, 2.48 seem to be connected by the theme of karma. But then 2.49 the direction changes, Krishna tells Arjunan that Karma is inferior to buddhi. 2.52 is having direct attack on Shruti. It says if you have detachment given by yoga, you don't need the Shruti.

எனவே மூன்று கீதைகளின் கலவையாக அதாவது கர்ம யோக வேத கீதா, ஞான யோக சாங்க்ய கீதா, பக்தி யோக கீதா என்பதாக இன்று நமக்கு தரப்பட்டுள்ள பாடல்கள் இருக்கின்றன. தேசாய் வருகிற இடம்

Theses three separate Gita which once may have been separate expositions of doctrine for students but put together by the third author to make the Bhagavad Gita what it is today.

Original Gita வில் 209 பாடல்கள் இருந்ததாக டச்சு பேரா குயிக்கென் சொல்கிறார். தனது ஆய்வின் நோக்கம் என தேசாய் சொல்வது

A revered text which argues against the logic of equality of respect deserves to be examined carefully. The Gita as a central text of Indian culture needs to be examined in terms of its message for the independent Republic of India . Is it a suitable text for modern day India என்கிற கேள்விக்குமான ஆய்வாக இதை தேசாய் நகர்த்தி சென்றுள்ளார்.

ஒருவர் ஏற்கலாம் அல்லது மறுக்கலாம். வாய்ப்புள்ளவர் படித்துப் பார்க்கலாம்.

sep 15, 2023

உண்மையில் ஜாதியை வெறுத்தோர் எந்த ஜாதியை இகழ்ந்து, தன் ஜாதியைப் புகழ்வார்கள் ? பொதுவாக மதங்களை கைவிட்டோர், எந்த மதத்தை தாழ்த்தி எந்த மதத்தை உயர்த்துவார்கள். உண்மையில் மதங்களை விலக்கியோருக்கும், ஜாதியைத் தள்ளி வந்தவர்களுக்கும் எல்லா ஜாதியும் ஒன்றே- எல்லா மதங்களும் ஒன்றே. உயர்வு தாழ்வு கிடையாது- எல்லாம் ஒதுக்கி வைக்க வேண்டியவைகளே.

எந்த சுயமரியாதையுடையோனும் தன்னைப் புகழ்ந்து பிறரை இகழமாட்டான்

தோழர் சிங்காரவேலர் ஜூலை 1935

sep 15, 2023

ஏ எல் பாஷம் - இந்துயிசம்

புகழ்வாய்ந்த ஏ எல் பாஷம் அவர்கள் 1984-85ல் வட அமெரிக்காவில் ஆற்றிய 5 உரைகள் அவர் மறைவையடுத்து The Origins and Development of Classical Hinduism என்கிற புத்தகமாக 1989ல் கொணரப்பட்டது.

டெல்லி மோதிலால் பதிப்பகத்தார் 2016ல் இங்கு மீண்டும் கொணர்ந்தனர். ரூ 400 விலையில் கிடைக்கும் புத்தகமது. இந்தியா குறித்த தேர்ந்த ஆய்வு மனப்பான்மை கொண்டவர் Basham என்பதால் , இந்த புத்தகம் அமெரிக்க வாசகர்களிடம் சென்றது. இந்தியா விவாத வெளியில் இதை எவரும் குறிப்பிடாமல் இருப்பதால், இங்கு அதன் reach குறித்து அறியமுடியவில்லை.

பாஷம் அவர்களின் 5 உரைகளாவன

The Rig Veda and the beginnings of philosophy

The development of sacrificial religion in the later Vedic literature

The origins of the doctrine of transmigration

The growth of Mysticism and the Upanishads

The rise of Thesim and the composition of the Bhagavad Gita

பாஷம் அவர்களின் இறுதி ஆக்கமாக இது பார்க்கப்படுகிறது. பாஷம் மே 24, 1914ல் இங்கிலாந்தில் பிறந்தவர். அவர் தந்தை எட்வர்ட் ஆர்தர் பிரிட்டிஷ் இந்திய இராணுவத்தில் சிம்லா பகுதியில் முதல் உலகப்போர் காலத்தில் பணியாற்றியவர். அம்மா மரியா பத்திரிகையாளர், இலக்கிய கர்த்தா. பாஷம் தன் 7 வயதில் பியானோ கற்றாராம். 16 வயதிற்குள் ஏராள composition அவரால் முடிந்ததாம்.

பாஷம் என்றாலே the wonder that was India நினைவிற்கு வரும். ஆஜீவக வரலாறு என்பதுடன் கோல்டன் பரோ என்கிற நாவல் கூட எழுதியவர். அவர் இந்தியா, ஆசிய வரலாறு நாகரிகம் பற்றிய தீவிர ஆய்வாளராக தன் வாழ்நாளை முடித்துக்கொண்டார். 1985ல் கல்கத்தா ஏசியாடிக் சொசட்டியின் சுவாமி விவேகானந்தா கீழைத்தேய ஆய்வு பேராசிரியராகவும் இருந்தார். கல்கத்தாவில் ஜனவரி 27, 1986ல் அவர் மறைந்தார்.

அவர் எழுதியதைவிட, அவர் தன் மாணவர்களிடம் உரையாடியபோது தெறித்தவை ஏராளம் என அவர் பற்றி எழுதும் கென்னத் சொல்கிறார். இந்திய ஆய்வு என்கிற தளத்தில் புதிய புதிய பயணங்களை, புதிய புதிய தரவுகளுடன் அவர் செய்துகொண்டே இருந்தாராம்.

இந்த 5 உரைகளை அவரின் மேலான ஆய்வு அனுபவத்தின் சாரம் என்றே கென்னத் குறிப்பிடுகிறார். இனி பாஷம் உரைகள் உணர்த்தும் சில செய்திகள்..

அவரது முதல் உரையிலிருந்து...

ஹரப்பா தொல்பொருள் ஆய்வின் படி சிந்து வெளி நாகரிகம் இந்த துணைகண்ட மண் சார்ந்த ஒன்றே. வெளி படையெடுப்பாளர் உருவாக்கியதல்ல. மொகஞ்சதாரோ ஹரப்பா என்கிற இரு பெரும் நகரங்களின் கலாச்சாரம் தொடர்புகொண்டதாக ஒத்ததாக இருந்தது.

கிமு 1700களில் மேற்கிலிருந்து ஆரியர் வருகை போரால் மொகஞ்சதாரோ அழிவுற்றிருக்கலாம். நகரம் கைவிடப்பட்ட 2000 ஆண்டுகள் கழித்து புத்த ஸ்தூபி ஒன்றை சிந்தி விவசாயிகள் எழுப்பினர். இதுவும் கைவிடப்பட்டு, அப்பகுதி மக்கள் இஸ்லாம் தழுவினர்.

ஹரப்பா என்னவானது- அதன் செங்கற்கள் எப்படி உருவப்பட்டன- அதன் மீது ரயில் பாதைகள் வந்தன . .. அந்நகரம் அமைந்த தோற்றம், அங்கு கிடைத்த பொருட்களை வைத்து பார்க்கும்போது சிவ வழிபாட்டின் முன் அறிகுறிகள் தெரிகின்றனஎன பலர் சொல்கின்றனர். ஆனால் அப்படி சொல்ல போதுமான ஆதாரங்கள் இல்லை என்றே

பாஷம் நினைத்தார். In fact the evidence for any continuity between this prehistoric god and Siva is rather weak என்கிறார். நிச்சயமாக இது கோயில் தான் எனவும் எந்த கட்டிடத்தையும் அறுதியிட்டு கூறமுடியவில்லை என்கிறார். இங்கு அவர் ஊகிப்பது

It is possible to be a very devout Hindu without ever going near the temple, which is late development in Hinduism and is still not one of its essential features எனவும் சொல்கிறார்.

ரிக்வேதம் பரவலாக்கப்பட்டதை அவர் இப்படி எழுதுகிறார்.

It was only with great difficulty that a few Brahmans in Calcutta were persuaded in the 1780s to divulge the oldest of these texts Rig Veda, once the text was made public other Brahmans from other parts of India followed them. அதிலும் காஷ்மீர் பிரதிக்கும் தமிழ் பகுதி பிரதிக்குமே நிறைய வேறுபாடுகள் இருந்ததாம்.

3000 ஆண்டுகளாக மனனம் மூலம் கைமாற்றி தந்த ஒன்று மிக accuracy ஆக வந்திருக்க முடியுமா எனத் தெரியவில்லை. பல பிராமணர் அதன் vaguest notions because it's language is archaic என்கிற குழப்பத்துடன் மனனம் செய்து கைமாற்றி தந்திருக்கக்கூடும்.

ஆரியர் வருகை என்பதும் கூட concerted invasion என்பதாக இல்லாமல், அடுத்தடுத்து வந்த கூட்டங்கள் என்பதாக தெரிகிறது. அவர்கள் பஞ்சாப் பகுதிகளில் இந்த வேத பாடல்களை இயற்றியிருக்கலாம். எல்லா அறிஞர்களும் சொல்வது போல் ரிக் 10 வது மண்டலம் சில நூற்றாண்டுகளுக்கு பின்னர் அதில் சேர்க்கப்பட்டிருக்கலாம் என பாஷமும் சொல்கிறார். இந்திரன் குறித்து 250 பாடல்களும், அக்னி குறித்து 200 பாடல்களும் இருக்கின்றனவாம். அரசன் சுதாசின் வெற்றிகளைப் பாடும் பாடல்கள் ஏராளம்.

ஆரியர்கள் நாடோடிகள் nomadic என்பதால் அவர்களின் பாடல்களில் நகர வாசம் ஏதும் வரவில்லை என்கிறார் பாஷம் . The hymns are addressed to pantheon Gods with no very definite hierarchy. Max Muller called this Henotheism.

The hymns of the Rgveda were chiefly composed for chanting at soma sacrifices..and gods and men mixed on almost equal terms . Relations with gods were friendly.

பிரம்மன் என்கிற பதம் 10 வது மண்டலம் பாடலில் வருவதாக பாஷம் சொல்கிறார். அடுத்து இரண்டு முக்கிய அம்சங்களை பாஷம் தருகிறார். இறந்தவர்களில்

வசதியானவர்க்கு மட்டுமே எரிக்கப்பட்ட வாய்ப்பு கிடைத்திருக்கலாம் என்றும், சிரார்த்தம் என்கிற பழக்கம் இருந்ததாக தெரியவில்லை என்றும் சொல்கிறார்.

sep 14, 2023

திராவிட ஆய்வு - பேரா சிவத்தம்பி

Understanding Dravidian Movement : problems and perspectives என்கிற புத்தகம் 1995ல் என் சி பி எச் கொணர்ந்த ஒன்று. கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் ஜாப்னா பல்கலை பேராசிரியராக இருந்த நேரம்- கம்யூனிஸ்ட் கட்சி பாலன் இல்லத்தில் 1981 ல் அவர் ஆற்றிய உரையது.

பேரா சிவத்தம்பியின் ஆய்வுரை மீது 30 தோழர்கள் ஆற்றிய வினையுடன் கேசட் பதிவு செய்யப்பட்டு, அதை செய்தவர்கள் அக்கேசட்டை miss செய்த நிலையில், சிவத்தம்பி அவர்களிடம் இருந்த நகலை வைத்து 1995ல் இந்த சிறிய புத்தகத்தை (65 பக்க) ஆங்கில மொழியில் கொணர்ந்தனர். சாரமான பிழிவாக இந்த புத்தகம் பார்க்கப்பட்டது. மூத்தவர் தோழர் ஆர் பார்த்தசாரதி முன்னுரையும் சிறப்பானதாக அமைந்தது.

நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், திக, திமுக, திமுக பிளவு என 5 கட்டங்களை குறித்தும், பெரியார் என்கிற ஆளுமையின் பங்களிப்பு குறித்தும் சிவத்தம்பி விவாதிக்கவேண்டும் என்றார்.

சிவத்தம்பியின் இந்த புத்தகத்தில் நான் உணர்ந்த சில முக்கிய புள்ளிகள்..

இந்திய விடுதலையில் எதிர்மறையாக இருந்தார்கள் என்கிற அம்சம், விடுதலைக்கு பின்னரான காலத்தில் பொருத்தமற்று போகலாம் (losses its relevance in the context of the post independence transformation of society) (-பார்த்தசாரதி)

அண்ணா தனது அரசியல் வாழ்வின் முதல்படியை நீதி கட்சி பொப்பிலி அரசர் செயலராக துவங்கினாலும், அதன் மிட்டா மிராசு குணம் உதவாது- சாதாரண மக்களின் திரள் கட்சியாக திக மலர பெரியாருக்கு உதவி செய்தார்.

இந்தி எதிர்ப்பின் நியாயம் உணரப்படவேண்டிய -தமிழ் கலாச்சாரம் பேசப்பட வேண்டிய ஒன்றாக இருந்தாலும், ஆங்கில மோகம் சார்ந்த மேற்குமயமாக்கலின் வேகம் ஒரு நாள் அழிவிற்கு இட்டு செல்லலாம்(to stem the tide of Hindi and the hope to enlarge the vision of Tamils through English is not stopped in time, Dravidian movement will be held responsible for the loss of Tamil identity)- பார்த்தசாரதி

Dravidian movement radicalised the politics of Tamilnadu

1916 Non Brahmin Manifesto does not deny the ritual position of the Brahmins as the highest and most sacred of the Hindu castes. But Periyar's SRM not accepted the concept of Varnasrama. JP was a conservative one, SRM radical and progressive.

During 1938 Anti Hindi agitation, the demand of Periyar was separate Tamilnadu. But in 1940 at Tiruvarur JP conference the demand was separate Dravidam under British

" ..திராவிடர்களின் அகமாகிய சென்னை மாகாணம் இந்திய மந்திரியின் நேர்ப்பார்வையின் கீழ் தனி நாடாகப் பிரிக்கப்பட வேண்டும்"

The cry for Dravidanadu emanating from the Tiruvarur conf is not the product of a mass movement as was the cry for Tamilnadu that arose out of Anti Hindi struggle.

Anti Brahminism, demand for communal quota for State services on which the entire edifice of Dravidian movement stands

If it were to be accepted that the Dravidian movement is the political expression on the part of Tamils to emphasise their identity as a nationality within India, then how come that it was expressed through the slogan of Dravidianism and Dravidanadu and not as a cry of Tamilnadu.

The reason simply was that Dravidian consciousness was false consciousness, in that arose against the late 19th, early 20th century formulations of Aryan supremacy which found devoted adherents in India. The Dravidian cry was a counter poise to the Aryan cry.

It was in Tamil region that the Dravidian cry was articulated effectively, not in Kerala, Andhra or Karnataka. It is not that anti Brahminism was not there in those districts, but it did not arise out of, nor did it lead to a Dravidian consciousness. Even lexically, the word Dravida in Sanskrit refers also to Tamil.

The significance of EVR in the history of Dravidian movement lies in the fact that he argued the necessity for a secularistic democratic revolution to overcome the restraints of traditional society.

The estrangement between the communists and EVR was due to the fact that EVR disowned all connections with the communists for fear of reprisals by the British government

தலித் வாய்ஸ் நடத்திக்கொண்டிருந்த ராஜசேகர் ஷெட்டி போன்றவர் இப்படிக் கருதினர்...however , the Periyar movement has enveloped mostly the backward Shudras whose interests are antagonistic to that of untouchables

Periyar's major contribution to Tamilian life was that he initiated the anti feudal, secular revolt of the down trodden masses. But because the type of the struggle he advocated was not based on the basis of dialectics, it did not take him on to new horizons. It also enabled Jeevanandam to take a more meaningful attitude towards cultural legacy of the Tamils- legacy of the past from the point of view of humanism

It is true that class consciousness is growing, it is also true that caste consciousness negating class consciousness, is also on the increase

DMK formally abandoned its cry for Dravidanadu and when in power in 1967 argued for regional autonomy. Annadurai's time saw Tamilian nationalism at its height. The greatness of Annadurai lay, in that he was persuasive enough to convince his adversary of his sincerity of purpose.

DK was just Dravidar Kazhagam the association of Dravidians. DMK Dravida refers to a territorial entity.

An important historical advantage the DMK had in the initial attraction of it was the ban of CPI in Madras from 1948-52. The DMK made full use of it. (refer com Spratt book DMK in power)

No wonder the DMK found itself without any comprehensive economic policy when it came to power. Booklet puthiya varalaru of Annadurai deals only ameliorative measures and does not refer to any planned economic policy

Annadurai's major achievement lies in the manner he politicised Tamil culture and gave it a secular twist and the manner he exploited the media for this.

அறிஞர் அண்ணா தோழர் ராமமூர்த்தியிடம் சொன்னாராம்

" என்னுடைய கட்சி நான் விரும்பியதற்கு முன்பே ஆட்சிக்கு வந்துவிட்டது..என்னுடைய கட்சியில் லஞ்ச ஊழல் பரவிவிட்டது..இதனைச்சீர்படுத்தும் நிலையில் நான் இல்லை..I want to die in harness"

சிவத்தம்பி ஆய்வு இத்துடன் நின்றது. இரு கேள்விகளை ஆராயவேண்டும் என அவர் சொல்லி நிறுத்துகிறார்.

1972 உடைவு

Socio cultural counter offensives that arose as a result of the Dravidian movement..

சிவத்தம்பி அவர்களின் புத்தகத்தை மீண்டும் படித்த போது , இன்றுள்ள அரசியல் என்னுள் கீழ்கண்ட சிந்தனையை கிளர்த்தியது.

இன்று இவை போன்ற ஆய்வுகளை பேசும் நிலையில் தமிழ் பொது புத்தி இல்லை. 50 ஆண்டுகால ஆட்சி என்கிற பெருமித சோதனை தன்னை ஒரே மாடல் என முன்னிறுத்திக்கொள்ளும் தன்மையை எடுத்துள்ளது. அதன் மீதான புகழ்பாடல்களால் தமிழக அரசியல் நிரம்பி வழிகிற நிலையைத்தான் இன்று உணரமுடிகிறது.

சோவியத் அமெரிக்க கால கெடுபிடி யுத்தம் கொடுத்த peaceful coexistence என்கிற படிப்பினை இரு நாடுகளின் இணக்கத்திற்கே தேவையாக இருந்தது என்பதை எடுத்துக்கொள்ளாத அரசியல் இங்கு ஒரே நாட்டில் மத்திய மாநில அரசாங்க உறவுகளில் நெருக்கடியாக்கப்படுகிறது. அரசாங்க உறவுகளில் ideological diplomacy அவசியமா என்கிற கேள்வியை அமெரிக்க சோவியத் உறவுகள் கேட்டுக்கொண்டன என்ற படிப்பினையும் இங்கு கணக்கில் கொள்ளப்பட்டதாக தெரியவில்லை.

10 hrs 14-9-2023

sep 14, 2023

M k Gandhi taught so

One who is free from hatred requires no sword Wherein courage is required- in blowing others to pieces behind a cannon and be blown to pieces? Who is the true warrior- he who keeps death always as a bosom- friend, or he who controls the death of others?

sep 13, 2023

இந்துயிசம் என்றால்- காந்தி

NBT and ICHR இணைந்து காந்தியின் 125 ஆம் ஆண்டில் (1994ல்) What is Hinduism என்கிற சிறு தொகுப்பு ஒன்றை கொணர்ந்தனர். அதன் 30 ஆம் ஆண்டை நாம் நெருங்கி கொண்டிருக்கிறோம். இன்று அரசியல் களத்தில் பெரும் மோதலாக மாற்றப்பட்டுள்ள விவாத கணங்களின் அவசியம்/ அவசியமின்மை, ஞானம்/ போதாமை குறித்து ஒவ்வொருவருக்கும் அவரவர் அபிப்பிராயங்கள் நிலவலாம். இத்தருணத்தில் காந்தி அவ்வப்போது தான் இந்து என தன்னை எப்படி புரிந்து நடைமுறை அனுசரிப்புகளை மேற்கொண்டார் என்ற புரிதல் இந்த விவாதத்தில் ஆழமாக கொணரப்படவே இல்லை. அவர் வாக்கு அரசியலிலிருந்து வெகு தூரத்தில் இருப்பதால், அவரை பொருட்படுத்தாத அரசியலின் உச்சத்தை உணரமுடிகிறது. வாய்ப்புள்ளவர் இந்த எளிய புத்தகத்தை படித்துப் பார்க்கலாம். இணையத்தில் What is Hinduism Gandhi எனத்தேடினாலே அதன் pdf கிடைக்கும். காசி இந்து சர்வகலா சாலைக்கு கொடுக்கும் மதிப்பை காந்தியின் தொகுப்பான (ICHR - NBT) What is hinduism என்பதற்கு கொடுத்திருந்தால் விவாதம் இணக்கமான திசை நோக்கி நகர்ந்திருக்கும். எவருக்கு இணக்கம் வேண்டும் என்ற உலகில் காந்தி தேவைப்படுவதில்லை..

காந்தியின் what is Hinduism என்கிற அந்த சிறு தொகுப்பிலிருந்து கொடுக்கத் தோன்றிய சில வரிகள்..

”I do not believe in the exclusive divinity of the Vedas. I believe the Bible,the Quran, and the Zend Avesta to be as much divinely inspired as the Vedas.

My belief in the Hindu scriptures does not require me to accept every word and every verse as divinely inspired.

Nor do I claim to have any firsthand knowledge of these wonderful books. But I do claim to know and feel the truths of the essential teaching of the scriptures.

I decline to be bound by any interpretation, however learned it may be, if it is repugnant to reason or moral sense. I do most emphatically repudiate the claim (if they advance any such) of the present Shankaracharyas and shastris to give a correct interpretation of the Hindu scriptures. On the contrary I believe that our present knowledge of these books is in a most chaotic state. I believe implicitly in the Hindu aphorism, that no one truly knows the shastras who has not attained perfection in Innocence

(ahimsa), Truth (satya) and Self-control (brahmacharya) and who has not renounced all acquisition or possession of wealth.

I believe in the institution of gurus, but in this age millions must go without a guru, because it is a rare thing to find a combination of perfect purity and perfect learning. But one

need not despair of ever knowing the truth of one's religion, because the fundamentals of Hinduism, as of every great religion, are unchangeable, and easily understood. Every Hindu believes in God and his oneness, in rebirth and salvation.

Purity of Hinduism depends on the self-restraint of its votaries. Whenever their religion has been in danger, the Hindus have undergone rigorous penance, searched the causes of the danger and

devised means for combating them. The shastras are ever growing. The Vedas, the Upanishads, the Smritis, the Puranas, and the Itihasas did not arise at one and the same time. Each grew out of the necessities of particular periods, and therefore they seem to conflict with one another.

These books do not enunciate anew the eternal truths but show how these were practised at the time to which the books belong. A practice which was good enough in a particular period would, if blindly repeated in another, land people into the 'slough of despond'. Because the practice of animal-sacrifice

obtained at one time, shall we revive it today? Because at one time we used to eat beef, shall we also do so now? Because at one time, we used to chop off the hands and feet of thieves, shall we

revive that barbarity today? Shall we revive polyandry? Shall we revive child-marriage? Because we discarded a section of humanity one day, shall we brand their descendants today as outcastes?

our sages taught us to learn one thing: 'As with the Self,

so with the Universe'. It is not possible to scan the universe, as it is to scan the self. Know the self and you know the universe. But even knowledge of the self within presupposes ceaseless striving— not only ceaseless but pure, and pure striving presupposes a pure heart, which in its turn depends

on the practice of yamas and niyamas–the cardinal and casual virtues.

Hinduism does not consist in eating and non-eating. Its kernel consists in right conduct, in correct observance of truth and non-violence. Many a man eating meat, but observing the cardinal virtues of compassion and truth, and living in the fear of God, is a better Hindu than a hypocrite who abstains from meat.

The stories told in the Puranas are some of them most dangerous, if we do not know their bearing on the present conditions. The shastras would be death-traps if we were to regulate our conduct

according to every detail given in them or according to that of the characters therein described. They help us only to define and argue out fundamental principles.

As the Gita says, 'There is nothing in the world that is entirely free from fault.' Let us,therefore, like the fabled swan who rejects the water and takes only the milk, learn to treasure only

the good and reject the evil in everything. Nothing and no one is perfect but God. ”

sep 13, 2023

டிராட்ஸ்கி செய்தி

1910ல் டிராட்ஸ்கி தனது 30 ஆம் வயதை கடந்து கொண்டிருக்கிறார். பத்திரிகை பிராவ்தாவை ஆரம்பித்து அதற்கு நிதியை manage செய்வதில் பாடுதான்.

மாக்சிம் கார்க்கி இடது பத்திரிகைகளுக்கெல்லாம் தன்னால் ஆன உதவியை செய்துகொண்டிருந்தார். டிராட்ஸ்கியும் கார்க்கியை நிதிக்காக அணுகி உதவி பெறுகிறார். 1910ல் மென்ஷ்விக் போல்ஷ்விக் சேர்ந்து கூடினர்.

டிராட்ஸ்கிக்கு இரு பக்கத்திலும் செல்வாக்கில்லை. அவர் எழுதுகிறவர். கட்சி அமைப்பில் அவருக்கென குழுவோ செல்வோக்கோ இருக்கவில்லை. ஆனாலும் அவரின் எழுத்துக்களை மென்ஷ்விக், போல்ஷ்விக் உட்பட பலரும் பிரசுரித்து வந்தனர். இந்த அடிப்படையில் பிராவ்தாவிற்கு உதவி செய்யவும் ஏற்றுக்கொண்டனர்.

உதவி சும்மா வருமா நிபந்தனை வந்தது. லெனினுக்கு நெருக்கமாக இருந்த காம்னேவ் வை எடிட்டோரியல் குழுவில் சேர்க்கப்பட நிபந்தனை. காம்னேவ் டிராட்ஸ்கி சகோதரியின் கணவர்தான். குடும்பத்திலிருந்த வேறுபாடுகள் பிராவ்தா அலுவலகம்வரை நீண்டது.

டிராட்ஸ்கி எதை எழுதினாலும் அதை கண்காணித்து விமர்சித்து வந்தார் காம்னேவ். நிதியுடன் பிரச்னையையும் இந்த தோழர்கள் சேர்த்து தந்த உணர்வில் டிராட்ஸ்கி.

டிராட்ஸ்கி இந்த நேரத்தில் அவர் முக்கியம் எனக் கருதிய முழக்கம் ஒன்றை தந்தார்.

One party one working class one revolution - It is madness for the factions to conspire against each other.

சொல்தல் யாருக்கும் எளிதாம் என்பதாகவே டிராட்ஸ்கி வாழ்வும் காட்டியது. டிராட்ஸ்கி வாழ்வு மட்டுமல்ல, அமைப்பில் வேலை செய்த எவருக்கும் - அது எந்த அமைப்பாக இருந்தாலும் இப்படி ஏதோவொரு குழு சண்டையில் ஏதோவொரு காலத்திலாவது சிக்காமல் அமைப்பு வாழ்க்கை போயிருக்காது. அப்படி தப்பித்தவர் எவரேனும் இருந்தால் அவர் பாக்கியவானே- Inputs Trotsky A Biography Robert Service

sep 10, 2023 கீதா- தேசாய்

I was in the train this morning and happened to read Marxian and Economic Scholar Megnad Desai's book

" Who wrote The BhagvadGita- A secular Inquiry into a Sacred Text" . The name itself suggests us it is an critical examination of its so called origin, its 700 slokas etc.

It seems to me that most of the things in that book is a kind of repeat attempts.

Three slokas I have taken from his translation. It is about kshatriya svadharma.

Sloka 2.33 speaks

" If you do not do this battle for the right, then you have abandoned your duty and virtue and glory, and sin shall be your portion"

Second one taken is Sloka 2.37

" slain you shall win heaven, victorious you shall enjoy the earth, therefore arise.."

Third one of my choice is Sloka 2.38

" Make grief and happiness, loss and gain, victory and defeat equal to your soul and then turn to battle; so you shall not incur sin"

One can hear this kind of sermons in any Nation/ organisation, where the warriors, its members, are expected to do sacrifice for a grand cause narratives. I have been hearing this for the last so many years.

-This year the 10th year of this Meghnad's book

sep 9, 2023

ரிக்வேதகால ஆரியர்கள்- ராகுல்ஜி

ராகுல் சாங்கிருத்தியாயனின் ' ரிக் வேதகால ஆரியர்கள் ' என்கிற அவரது ஆய்வு நூல் தமிழில் இருக்கிறது. அலைகள் திரு எத்திராஜூலு மொழிபெயர்ப்பில் கொணர்ந்த நூல். தோழர் சாங்கிருத்தியாயன் விசால வாசிப்பில் சில முக்கிய வரலாற்று செய்திகளை ரிக் வேத 10 மண்டலங்களையும் சார்ந்த பாடல்கள் வழி சேகரித்து தன் perceptionயை இந்த புத்தகத்தில் தந்துள்ளார்.

இன்று நாம் பொது புத்தியில் புரிந்தது மாதிரி வைத்திருக்கும் அம்சங்கள் ஆரியர்-திராவிடர் வரலாற்று வெளிச்சத்தில் சரியானவையா என்ற கேள்வி இந்த ஆக்கத்தை படிக்கும்போது வரலாம். சில பொது ஏற்புகளையும் பார்க்கலாம். இனி ராகுல் ஆய்வில் கிடைக்கும் சில வரலாற்று துணிபுகள்..

ஆரியர் இந்தியாவிற்கு வெளியிலிருந்து வந்தவர்கள் என்பதை ஏற்காவிட்டால் வரலாற்று குழப்பம் ஏற்படும்.

சிந்து வெளி மக்கள் ஆரியருக்கு முன்பே நகர நாகரிகங்களில் வியாபார உலகில் சிறந்து வாழ்ந்தவர். அவர்களுடன் ஏற்பட்ட மோதலில் இம்மக்களை தஸ்யூக்கள் கறுப்பர்கள் என அடிமைப்படுத்தினர் ஆரியர். தாசன் என்கிற பதம் இதிலிருந்து தான் வந்தது. இவர்கள் திராவிடர்கள் எனவும் வரலாற்றில் அறியப்பட்டுள்ளனர். இந்த தஸ்யூக்கள் 'கிருஷ்ணர்கள்' என்கிற கறுப்பு அடையாளத்தாலும் பார்க்கப்பட்டனர்.

(சிவன் தான் திராவிட ஆதி கடவுள் என்கிற பேச்சுடன், கிருஷ்ணன் என்பதும் தஸ்யூக்கள் என்கிற உரையாடலை சாங்கிருத்தியாயன் இங்கு தந்துள்ளார்)

ஆரியர் பல இனக்குழுக்களாக தங்களுக்குள் போரிட்டுள்ளனர். எங்க ஏரியா உள்ளே வராதே என்கிற போராட்டம் ரிக் வேத மண்டலங்களில் புகழ் வாய்ந்த 10 மன்னர் யுத்தம் என போற்றப்படுகிறது.

ஆரிய முக்கிய பெரும் இன குழுக்கள் 5.

புரு- இதன் புகழ் வாய்ந்தவர்களாக வத்ர யஷ்வன், திவோதாஸ், சுதாஷ் போன்றவர். இவர்கள்தான் பரதர்கள் என புகழ் அடைந்தனராம். (இதிலிருந்துதான் பரத் பாரத் என்கிற name game அலகிலாவிளையாட்டு). இவர்கள் பிருஷ்ணி ராவி நதிக்கரையில் வாழ்ந்தனராம். இந்த புருக்களிடமிருந்து உருவான ஒன்று பின்னர் குரு வம்சம். பரதர்களுக்கு முக்கியமானவர் பரத்வாஜர்.

யதுக்கள் இனக்குழு- இவர்கள் இன்று அறியப்படும் யாதவர்களின் முன்னோர்கள். (தமிழகத்தில் முன்பு கோனார்கள்.) . சப்த சிந்து பகுதியில் இவர்கள் புரு குழுவினரோடு மோதி தோற்றனராம். புரு திவோதாஸ்- சுதாஷ் யாதவர் மற்றும் துர்வசுக்களுடன் அடிக்கடி போரிட்ட காட்சிகள் ரிக் பாடல்களில் வருகின்றனவாம். எல்லா வெற்றிகளும் இந்திரனுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளன. யதுக்கள் கிருஷ்ணன் மதுராவுடன் இணைத்து பேசப்படுகின்றனர். (யதுகுல கிருஷ்ணா)

துர்வசுக்கள் குழு- கண்வர் வத்சர் வழியினராம். இவர்கள் யதுக்களுடன் துணை நின்றாலும் புருக்களிடம் தோற்றனர். இவர்கள் பரதர்களின் பகைவர்களாக இருந்துள்ளனர். ஆரிய சண்டை அவர்களுக்குள் முற்றுகிறது.

திருஹ்யுக்கள் குழு- பிருகு இவர்களின் வழிகாட்டியாம். இவர்களுடன் அணு என்ற குழுவும் இருந்ததாம். 10 மன்னர் போரிலே வசிஸ்ட்டர் வழியில் சுதாஸ் புருக்கள் இவர்களை வீழ்த்தினராம். இவர்களும் இந்திரன் அக்னியைத்தான் கொண்டாடினர். பசு கவர்தல், செல்வ சண்டை என ரிக் பாடல் சொல்கிறதாம். புரு சுதாஷ் இந்திரனின் உற்ற நண்பனாம். யுத்தம் முடிவில் ஆயிரக்கானவர் நதிகளில் மூழ்கடிக்கப்பட்டனராம். திருஹ்யக்கள் ராவி நதிக்கு மேற்கே இருந்தவர்களாம்.

அணு என்கிற 5 வது குழு- இவர்களை வசிஸ்ட்டர் பொய்யர்கள் என அழைத்தாராம். இந்திரன் ரதம் அமைக்கும் அளவு skilled ஆன அணு குழுவினரை புருக்கள் தோற்கடித்தனராம்.

இதைத்தவிர பக்தூண் (பட்டாணியரா) , பலான், சிவி (சிவ) , விஷாணி, ஷிம்யு, க்ரிவி, கவஷ், உசத், மன்யு, போன்ற 24 கிளைகள் கூட ரிக் வேதகால பாடல்களில் வருகின்றனவாம்.

சுதாஷ் 10 மன்னர்களை வென்ற கதைதான் (தாஸராக்ஞ யுத்த) புகழ்வாய்ந்த 10 மன்னர் யுத்தமாம். புருவில் திரிஸீக்கள் என்ற பிரிவினரான திரிவோதாசும் சுதாசும் பரதர் கிளைகளை உயர்த்தினராம்.

ரிக் வேதகாலம் என சாங்கிருத்தியான் ஏற்பது கிமு 1200- 1000. அப்போது மொகஞ்சதாரா ஹரப்பா திராவிடர், காஷ்மீர்- அசாம் பகுதியில் கிர் என்கிறகிராத் மக்களுடன் ஆரிய இனக்குழுக்கள் மோதியுள்ளன. திராவிடர் கறுப்பர் எனில் கிராதர் மஞ்சள் நிறத்து மங்கோலியர் - இப்போதான திபேத்தியர்..

மிக முக்கிய செய்தி ஒன்றை சாங்கிருத்தியாயன் தருகிறார். ரிக் முதல் 9 மண்டலங்களில் நான்கு வர்ணங்கள் பற்றி இல்லை. பத்தாவதில் 10-10-12 பாடலில்

முகம், கை, தொடை , கால் வழி பிறப்பு சொல்லப்பட்டுள்ளதாக ராகுல் தெரிவிக்கிறார்.

ஆரியர் தம் வேற்றுமைகளை மறந்து ஒன்றாக, ஒரு மனத்துடன், மந்திரத்திலும் ஒன்றாக , சம பணி கொண்டதாக இருங்கள் என அறிவுரையை 10வது மண்டலம் 191வது ஷூக்தம் சொல்கிறதாம்.

பணி என்ற பிரிவுடன் ஆரியர் உறவுடன் இருந்தனராம். இவர்கள் பன்யா வியாபாரி வைஸ்யர் என அழைக்கப்பட்டனர்.

ஆரியர் குழுக்களுக்கான முக்கிய ரிஷிகளாக வாமதேவர், பரத்வாஜர், வசிஷ்டர், விசுவாமித்திரர், அஷ்டகர், கஸ்யபர்,வாமகர், அங்கிரா, ஜமதக்னி, பிரிகு என 10 பேர்களை சொல்கின்றனர். (இன்றும் இவர்கள் கோத்திரங்களாக நிலவுகின்றனர்) . ரிக் ஷூக்தங்களை அதிகம் படைத்தவர் பரத்வாஜராம். விசுவாமித்திரர் காலம் என்பதே 15 தலைமுறைக்கு பிந்திய காலமாம். கிரத்ஸமத், கஷூவான், அகஸ்தியர் (வசிஷ்டர் சகோதரர்) , கோதமர், மேதாத்தி, சியாவாஷ்வ, குத்ஸா, மதுச்சந்தா, பிரஸ்கண்வர், அஜிகர்த என சில பாடல்களை தந்த ரிஷிகளும் உள்ளனராம்.

சிந்து இனத்தவரை கிருஷ்ணர்கள், தஸ்யூக்கள்,தபிஸ்கள் என ஆரிய குழுவினர் அழைத்துள்ளனர். பரத்வாஜர் அக்னி மற்றும் பணி குழுக்களின் செல்வத்தை எடுத்துச் சென்றாராம். மலைவாசிகள் தஸ்யு சம்ரன் தலைமையில் கிராதர்களுடன் சேர்ந்து ஆரியரை எதிர்த்து பெரும் போர்களை 40 ஆண்டுகள் நடத்தியதாக சாங்கிருத்தியாயன் சொல்கிறார். கிழக்கு நேபாளம் கிராத தேசமாம். (கிருஷ்ணன் திராவிடரா)

ரிக் வேதகாலத்திற்கு முந்திய மன்னர்களாக மனு, புரூரவா, நஹிஷ், யயாதி, மந்தாத என் 5 பேர் புகழுடன் இருந்தனராம். மனு பற்றி ரிக் 31 இடங்களில் சொல்கிறதாம். மனு தஸ்யூக்களை வென்றுதான் புகழ் பெற்றதாகவும் சாங்கிருத்தியாயன் சொல்கிறார். அக்னி மனுவிற்காகவே த்யௌ என்கிற சுவர்க்கம் உருவாக்கினாராம். புரூரவா ஊர்வசி காதல் பாடல்கள் ரிக்கில் வருகிறதாம்.

வாமதேவர் பாடல்படி 50 ஆயிரம் - கிருஷ்ணர் என்கிற கறுப்பு அசுரர்கள் கொல்லப்பட்ட தகவலையும் ராகுல் தருகிறார்.

பருச்சேப் மலைப்பகுதி தஸ்யூக்களின் வீரமன்னன் சம்பரனாம். திவோதாசின் மகன் இவனை வெற்றிகொண்டான். சம்ப்ரான் தஸ்யூக்கள் ‘சிஷ்னதேவர் ‘ (ஆண்குறி பூஜை செய்பவர்) என வசிஷ்டர் சொன்னாராம். (லிங்க வழிபாட்டை சொல்கிறார்களா) . இவர்கள் மனுவின் புத்திரர்கள் என ஏற்கப்படாமல்

அமானுஷ்யர்கள் என குறிக்கப்பட்டனராம். தஸ்யூக்களில் பெண்கள் வீரமாக போராடியது சொல்லப்பட்டுள்ளதாம்.

வசிஷ்டர் பேரன் கவுரவீதி மனுவை மன்னர் என்றும் ரிஷியென்றும் புகழ்கிறார். சம்பரனுக்கு முந்திய மலையரசன் நமுசியை இந்திரன் மனுவின் பொருட்டு கொன்றாராம். தலையை தூளாக்கியதாக பாடல் சொல்கிறதாம்.

பரத்வாஜர் எதிர்கொண்ட தஸ்யு வீரர்கள் சுமரி, துனி, சம்பர், சுஷ்ண

வசிஸ்ட்டர்- தாசன் விருஷஷிப்ரன்

குத்ஸ- சுஷ்ண, பிப்ரு, விருத்ர, சம்யம்

இன்னும் ஆரிய குழுக்கள் உணவு, சோமபானம் என ஏராள செய்திகள் இதில் தரப்பட்டுள்ளன. தஸ்யுக்கள், ஆரிய இனக்குழுக்கள் எப்படி கலந்தன - pure blood theory செல்லுபடியாகுமா என்கிற பல கேள்விகளையும் இந்த புத்தகம் எழுப்புகிறது.. ஆர்வம் உள்ளவர் படித்து பார்க்கலாம்

sep 7, 2023

புறநானூறு- சாமி சிதம்பரனார்

சாமி. சிதம்பரனார் மதிக்கப்பட்ட தமிழறிஞர். பெரியார் வரலாறு தந்தவரும் கூட. அவரிடம் வேறுபட்டவரும் கூட.

சாமி. சிதம்பரனார் 1958ல் புறநானூற்றிலிருந்து 34 பாடல்களை தேர்ந்து, மிக அழகான கதைச்சொல்லி வகைப்பட்டு விளக்கங்களை தந்த புத்தகம் 'புறநானூறு தமிழர் நாகரீகம்'. பழந்தமிழர் சமுதாயத்தின் பண்பாட்டை -அதன் நேர்த்தி மற்றும் இன்றுள்ள நாகரீகப் பார்வையில் குறைகளை எடுத்து இயம்பும் ஆக்கமிது.

தமிழரின் தலை சிறந்த கொள்கையை கணியன் பூங்குன்றனார் யாதும் ஊரே யாவரும் கேளிர் வைத்து சிதம்பரனார் விளக்கியிருப்பார். குறிப்பிட்ட ஊரை எமது எனச் சொல்லாமல் மக்கள் வாழும் எல்லா ஊர்களையும், எல்லா மக்களையும் சுற்றத்தார் எனப்பேசுதல் ..சிறியவர் என இகழ்தல் இல்லாமல், பெரியோர் என வியந்து போற்றாமல் இருக்கும் மாண்பு பேசுதல்..

நன்றி மறப்பது நன்றன்று எனச் சொல்லித்தரும் ஆலத்தூர் கிழார் பாடல் (புற 34), ஒன்று அறங்கருதி விட்டுவிடு இல்லையேல் மறங்கருதி போராட துணிவு கொள் என நம்பிக்கையூட்டும் கோவூர் கிழார் (நலங்கிள்ளி- நெடுங்கிள்ளி மோதல்) புற 44 பாடல், தமிழ்ப் புலவர் என்றால் தன்மானம் வேண்டும் எனக்காட்டும் மதுரைக் குமரனார் " அரசே நாம் யாருக்கும் அஞ்ச மாட்டோம்- யாரையும் பொய்யாகப் பாராட்டமாட்டோம்- எவ்வளவு துன்பம் அடைந்தாலும் மானமிழக்க மாட்டோம் " எனப் பேசும் புற 197 பாடல் என பல அருங்குணங்களை புறநானூறு வழிநின்று சாமி. சிதம்பரனார் விவாதித்திருப்பார்.

ஏழை சொல் அம்பலம் ஏறாது என்பதை வறியோர் வார்த்தை எடுபடாது என்பதாக புரிந்து கொண்டிருப்போம். ஆனால் புலவர்கள் அறிவற்றனை ஏழை எனச் சொன்னராம். அறிவுடையவர் சபையில் அவர் சொல் நிலையாது என்ற பொருளுண்டாம்

கண்ணகி என்றால் கோவலன் சிலம்பு தமிழ் பொது புத்திக்கு வரலாம். வள்ளல் பேகன் துணைவியார் பெயரும் கண்ணகி. மயிலுக்கு போர்வைத் தரும் அளவிற்கு இரக்கமும் கொடை மனதும் கொண்ட தமிழன் தான் பேகன். ஆனாலும் கண்ணகி விடுத்து வேறொரு மாதின்மேல் வயப்பட்டான். திருத்த முடியா கண்ணகி தனது

தாயகம் திரும்பினாள். கண்ணகி தாயகம் என சாமி இதில் ஏதும் சொல்லவில்லை.

தன்னை அவலட்சமணாமாக்கிக்கொண்டாள் கண்ணகி. இவள் குறைதீர்க்க, பேகனுக்கு அறிவுரை கூறி நல்வழிப்படுத்த கபிலர், பரணர், அரிசில் கிழார் முயன்றனராம். பேகன் ஊர் வையாவியாம். அது இன்றைய பழநியம்பதியாம்.

தலையாலங்கானத்து செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் முக்கொள்கை கொண்டவனாம்.

நாட்டில் வளம் சிறக்க இருக்கவேண்டும்- அதை புலவர் பாடவேண்டும்

நாட்டுக்குடி மக்கள் நல்லவராயிருக்கவேண்டும்.

மன்னன் என்றவகையில் வறியோர் துன்பந்தீரசெல்வங்களை வாரி வழங்கவேண்டும்- இரப்பவர்க்கு இல்லை என்பதில்லா நல்லறம்.

புறநானூற்றில் போர்செய்து வீரனாக இருத்தல் என்கிற மறம் பெரும்பாலும் பேசப்பட்டிருந்தாலும், போர் கொடிது தவறு- மக்கள் ஒற்றுமை உடையும்- செல்வம் பாழ்படும் என்பதும் பேசப்பட்டுள்ளதாம்.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்பதில் பாண்டியன் குடிப்பெயராம்- பல்யாகசாலை பெருமையாம்- பெருவழுதி பட்டமாம். குடுமி தான் பெயராம். குடுமிகளில் முற்பட்டான் என்பதால் முது சேர்ந்ததாம்.

கோப்பெருஞ்சோழன் என்றால் பிசிராந்தையார் என நினைவு கிளம்பிவிடும். உண்மை நட்பிற்கு உதாரணமாக இருவரையும் சொல்வர். பார்த்துக்கொள்ளமலேயே நட்பு பாராட்டியவர்கள். மன்னர் தோல்வியுற , வடக்கிருத்தல் செய்யவேண்டியதானது. அது அவரின் அறம். அறிந்த பிசிராந்தை நட்பு தானும் வடக்கிருந்து மாய்ந்தது. சரி பொத்தியார் நட்பு - இதே அளவில் குறைபடாததாம். அவர் ஏன் தமிழ் வெளிச்சத்தில் இல்லை. பொத்தியார் அன்றாட உயிர்த்தோழன். சோழன் வடக்கிருந்தபோது, பொத்தியார் துணைவி கருவுற்றிருந்தாராம். குழந்தை பிறந்து உலகம் அதன் தந்தை நீ என தெளிந்தபின் வடக்கிருக்கலாம் என்றாராம்சோழன். அதேபோல் பொத்தியார் காத்திருந்து வடக்கிருந்து நட்புக்காக தன்னை மாய்த்துக்கொண்டாராம்.

இப்படி தமிழரின் புறநானூறு காட்டும் நாகரிகத்தை சாமி. சிதம்பரம் மிகச் சுவையாக இந்நூலில் விரித்து தருகிறார். இன்றுள்ள நமது வாழ்க்கை முறை வேறு என்பதை ஒத்துப் பார்த்துக்கொள்ள உதவும் நூல்..

தமிழர் நல்லவேளை புறநானூற்று மற வாழ்க்கைதான் சாசுவதம் என அன்றாடம் அனுசரிக்கவில்லை. கேட்ட பொழுது பெருமிதம் கொள்கிறான். கால மாற்றத்தில் வாழ்வின் போக்கில் வாழ்ந்துகொண்டிருக்கிறான்.

sep 6, 2023

தென்னாப்பிரிக்கா ஒற்றுமை- சுசிலாவின் வால்யூம் 4

1900களின் முதல் பத்தாண்டுகளில் தென்னாப்பிரிக்க ஆட்சிகளாக இருந்த, cape- orange river colony-Transvaal- Natal ஆகிய நான்கும் இணைந்த தென்னாப்பிரிக்க ஒற்றுமை விரிவாக விவாதிக்கப்பட்டு வந்தது.

காந்தியடிகள் அங்கு இந்தியர் உரிமைக்கான போராட்டங்களை அப்போது நடத்தி வந்தார். ஒரே தென்னாப்பிரிக்கா என்பது white களின் எதிர்காலத்திற்கு உகந்தது என ஸ்மட்ஸ் போன்ற போயர் தலைவர்கள் கருதினர். பிரிட்டிஷ் சாம்ராஜ்ய கட்டுக்குள்- ஆஸ்திரேலியா கனடா போல் காமன்வெல்த்தாக என பல விவாதங்கள் எழுந்தன. அங்கிருந்த பிரிட்டிஷ் வழியினர் தங்களின் செல்வாக்கு போய் போயர் செல்வாக்கு அதிகரிக்குமோ என அஞ்சினர். காந்தி அனைவரையும் சமமாக white or coloured நடத்தாமல் தென்னாப்பிரிக்க ஒற்றுமை என்பதில் அர்த்தமில்லை என இந்தியர்- சீனர் உரிமை பார்வையில் கருத்து தெரிவித்திருந்தார்.

அங்கும் பெடரலா யூனிட்டரியா எப்படிப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டம், வாக்குரிமை எப்படி என்கிற விவாதம் பெருகியது. ஸ்மட்ஸ் போன்றவர் பெடெரல் குறித்தும், native களுக்கு வாக்குரிமை குறித்தும் தனது எதிர்மறை கருத்தை சொல்லிவந்தார்.

தென்னாப்பிரிக்க அரசியலில் லிபரல்கள் சிலராக இருந்தனர். அவர்கள் அரசியல் இலாபங்களை பார்க்காமல் கருத்துக்களை சொல்லிவந்தனர். அப்படி ஒரு கருத்தை ஷெரினர் என்பார் வெளியிட்டார். மானுட உரிமை என்ற அடிப்படை புரிதலுடன் அந்த ஒற்றுமை மலரவேண்டியதை எடுத்துச் சொன்னார். சுசீலா ஷெரினர் பேசிய முக்கிய பாரா ஒன்றை தந்துள்ளார். அந்த வரிகள்

W. P Schreiner

“ To embody SA constitution a vertical line or barrier separating its people , upon the ground of colour, into a privileged class or caste and unprivileged inferior proletariat, is , as I see the problem, as imprudent as it would be to build upon unsound and sinking foundations.

The freedom to which all are born in a free land is as true as their alleged equality is false..In our SA nation there must be room for many free peoples, but no room for any that are not free and free to rise”

மனிதர் தங்கள் வேறுபாடுகளை உயர்த்தி அதன் மூலம் எவ்வளவு ஆதாயம் என யோசிக்கும் எந்தவொரு காலத்திலும் , முடிந்தவரை இணக்கப்படுத்தும் சிந்தனைகள் வந்துகொண்டேயிருப்பதைக் காணமுடிகிறது. காந்தியும் தென்னாப்பிரிக்க இளம் வயதிலேயே, இப்படி இணக்கம் காணும் சிந்தனை சாலைக்கு சென்றதையும் பார்க்கிறோம்.

- Mahatma vol 4 Sushila

sep 6, 2023

கு ப ராவின் ஆய்வில்…

வாழ்க்கைதான் முடிவு. அதில் தென்படுவதுதான் முடிவான உண்மை என்று வாதிப்பது பௌதிக வாதம். அது விஞ்ஞான முடிவுகளை சார்ந்தேயிருக்கும்..வாழ்க்கை முடிவல்ல, உண்மை அதற்கும் மேற்போனது என்று வாதிப்பது லட்சியவாதம்; அது எப்போதும் அலௌகிகமான உண்மையைத்தேடும் கலைபண்பைச் சார்ந்ததாக இருக்கும்.

மார்க்ஸ் உபதேசித்த சமதர்ம வாதம் பௌதிக பொருளுண்மையை ஆதாரமாகக்கொண்டது. காந்தி உபதேசம் செய்யும் சமதர்மம் ஆத்மீக சக்தியின் ஆதாரத்தில் அமைந்தது. மார்க்ஸ் தத்துவத்தில் கடவுளுக்கு இடமில்லை; காந்தியத்தில் கடவுள்தான் எல்லாம்..

பௌதிக வாதமும் லட்சிய வாதமும் ஒன்றுபடவேண்டும்..நம் நாட்டில் இதை அம்ருதம் இஹ பவதி என்றனர். இங்கே இந்த வாழ்க்கையில்,அழிவின்மை தோன்றவேண்டும். இங்கே என்பது கையிருப்பு. அழிவின்மை என்பது அவா.

சிறுகச் செய்து பெருக வாழ் என்னும் நுட்பத்தையே மகாத்மா காந்தி தம் கொள்கையில் ஒவ்வோர் அம்சத்திலும் வற்புறுத்துகிறார். அதனால் பேராசைகளும் பொறாமைகளும் தலையெடுக்காமல் போய்விடும்…தியாகமே எல்லாவற்றிற்கும் மேற்போன கலை என்று அவர் சூத்திர வாக்காக சொல்வதன் அர்த்தமே இதுதான்

ரவீந்திரர் பராமார்த்திகவாதி, சாந்தம், சிவம், அத்வைதம் என்பவை கலை உணர்வாக வாழ்க்கையில் பரவி நின்றால்தான் உலகம் உண்மையாக வாழும் என்ற கருத்துக்கொண்டவர்…மனிதனின் மனோரதங்கள் எந்த அம்சங்களில் உன்னதமாக இருக்கின்றனவோ, அவற்றை ஆராய்ந்து உணர்ந்து பொறுக்கி சேர்த்து, புது வாழ்வை சித்தரித்து எழுத முயலும் அருங்கலாசாலை விசுவபாரதி. அது உலகப்போக்கின் வழியில், வாழ்க்கை இளைப்பாறிப் புத்துயிர் பெறும் பள்ளிக்கூடம்…

ஜவஹர் அரசியல்வாதத்திற்கென்றே அவதரித்தவர். வாழ்க்கையை அர்ப்பணம் செய்தவர். செல்வத்தையும் செருக்கையும் துறந்தவர்…காந்தியின் கொள்கையை பரிபூர்ணமாக அவரால் ஏற்கமுடியவில்லை. ஆனால் காந்தியின் இயக்கங்களில் கலந்துகொண்டு ஆதரவு கொடுக்காமல் இருக்கவும் முடியவில்லை. இந்த மனப்போராட்டம் அவரிடம் தீர்ந்தபாடில்லை. ..ஜவஹரின் மனதில் உணர்ச்சிகளுக்கும் தர்க்கத்திற்கும் இடைவிடாத போர் நடந்துகொண்டிருக்கிறது..ஒன்றை மறைத்து

மற்றொன்றை வெளியிடும் சூதும் அவர் தன்மைக்குப் புறம்பானது. நேர்மைதான் அவரது வழி. இதனால் அபேதவாதிகளிடத்தும்..காந்தியத்தில் முற்றிலும் ஈடுபட்டவர்களிடத்தும் மதிப்பு குறைந்திருக்கிறது. மதில் மேற்பூனையாக ஜவஹர் என இரு கட்சியாரும் சமயங்களில் கூறுவர்..

சிருஷ்டியின் புதிரையும், தனிமனித வாழ்க்கையின் புதிரையும் விளக்கி ஒன்று மற்றொன்றில் கொள்ளவேண்டிய நிலையை நிர்ணயிப்பதுதான் மனிதனுடைய லட்சியம்..

குபரா கட்டுரைகள் எதிர்கால உலகம்

sep5, 2023

திராவிடம்

திராவிட அரசியலின் எதிர்காலம் என்கிற ஆக்கம் 2020ல் எதிர் வெளியீடாக வந்தது. சுகுணா திவாகரின் 10 கட்டுரைகள் அடங்கிய 80 பக்கங்கள் கொண்ட சிறு வெளியீடு. இதில் இவ்வாசிரியர் வந்தடைந்த சில முக்கிய கருத்தாக்க புள்ளிகளாவன..

பெரியார் அதிகார மய்யங்களிலிருந்து விலகியிருக்கக் காரணம் அதிகார மய்யங்கள் கறைபடிந்ததாக இருந்ததால் மட்டுமல்ல, சமூகத்தில் நிலவும் அதிகாரமே அதிகார மய்யங்களில் நிலவுவதால், அதிகார மய்யங்களை நோக்கி நகர்வதால்- வலுவான சமூக மாற்றங்களை நிகழ்த்த முடியாது என்று நம்பியதாலும்..

பார்ப்பனர்களுக்கு அடுத்தபடியாகத் தமிழகத்தில் ஆதிக்கச்சக்தியாய் முக்குலத்தோர் சாதி வளர்ந்து வருகிறது.

எம்ஜிஆர் காலம்வரை கருத்தியல் அடிப்படைகளற்ற ஜனரஞ்சக இயக்கமாக இருந்த அதிமுக , ஜெயலலிதா என்கிற பார்ப்பனப் பெண்மணி தலைமை தாங்கிய காலத்திற்குப்பின் படிப்படியான வலதுசாரி இயக்கமாக மாறிப்போனது. பார்ப்பன - தேவர் ஆதிக்கசாதிக்கூட்டே அக்கட்சியின் அரசியல் நிகழ்ச்சிநிரலை கருத்தியல் கட்டுமானங்களை தீர்மானிப்பதாக மாறிப்போனது

தமிழுக்காக பாடாற்றியதிலும், மார்க்சியம் உட்பட முற்போக்கு கருத்துகளை இம்மண்ணில் விதைத்ததிலும் முன்னோடிகளாகத் திகழ்ந்த பிராமண சமூகத்தைச் சார்ந்த பலரை குறிப்பிட முடியும். அந்த மரபை மீட்டெடுக்க பிராமண சமூக படிப்பாளிகள் முன்வரவேண்டும்.

இப்போது பிராமணர் அல்லாதார் அரசியல் மங்கிப்போய் வெவ்வேறு இடைநிலை சாதிகளின் அரசியல்தான் இருக்கிறது…அய்ம்பதாண்டு காலத் திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் பார்ப்பனர் ஆதிக்கம் குறைந்திருக்கிறது. அச்சமூட்டும் அளவிற்கு இடைநிலை சாதிகளின் ஆதிக்கம் வளர்ந்திருக்கிறது. அவர்களே நடைமுறையில் தலித் எதிர்ப்பு சக்திகளாகவும் ஆணவக்கொலைகளை நிகழ்த்துபவராகவும் இருக்கிறார்கள்

ஒருவர் 'பார்ப்பனரல்லாதவர்' என்பதாலேயே அவர் எவ்வளவு நேர்மையற்றவராக இருந்தாலும், அதிகாரமய்யமாக இருந்தாலும் , பிற்போக்கு சக்தியாக இருந்தாலும், அவரை ஆதரிப்பது என்பது பகுத்தறிவு ஆகாது

சமகாலச் சூழலுக்கேற்ப பெரியாரியத்தை வளர்த்தெடுப்பதுதான் பெரியாரிஸ்ட்களின் பணியாக இருக்கவேண்டும். பெரியாரியத்தை மதமாக்குவது கூடாது.

கடவுள் இடத்தில் எதை வைப்பது என்ற கேள்வி காலந்தோறும் தொடரக்கூடிய ஒன்று. புத்தரும் பெரியாரும் அறவுணர்வை சமத்துவத்தை கடவுளின் இடத்தில் வைத்தனர். அண்ணாவும் கலைஞரும் கடவுளின் இடத்தில் தமிழை வைத்தனர். தமிழுணர்வு என்பதை கிட்டத்தட்ட மதவுணர்வாக மாற்றினர்.

அண்ணாவும் கலைஞரும் பெரியாரிடமிருந்து மாறுபட்டு கற்பின் அடையாளமாக கண்ணகியை உயர்த்திப்பிடித்தனர். ..திமுக வினர் மேடைபேச்சுகள் ஆணாதிக்கத்துக்கான அவல உதாரணங்கள்

அண்ணாவும் கலைஞரும் முன்வைத்த இந்தி எதிர்ப்பு மாநில சுயாட்சி கருத்தாக்கங்களை இன்று மமதா முதல் பினராயி வரை உயர்த்திப்பிடிக்கின்றனர்…பன்மைத்துவ இந்தியாவைக் காப்பாற்றவும் உள்ளடக்கும் தேசியத்தை வளர்த்தெடுக்கவும் இந்தியாவுக்கு காந்தியும் நேருவும் மட்டுமல்ல, கலைஞரும் அண்ணாவும் தேவை.

பெரியார் உருவாக்கியது 'திராவிடர் இயக்கம். திமுக வந்தபோது 'ர்' போய் திராவிட வந்தது. பெரியார் கூறுகள் கடவுள் மறுப்பு, சாதி ஒழிப்பு, பார்ப்பன எதிர்ப்பு, இந்திய தேசிய எதிர்ப்பு, சமஸ்கிருத எதிர்ப்பு, இந்தி திணிப்பு எதிர்ப்பு, இந்து மத எதிர்ப்பு, பெண்ணியம். திமுக ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றது.ஆணாதிக்க கட்சியாகவும் ஆனது. தேர்தல் பாதை ஏற்று இந்திய தேச அமைப்பை ஏற்று ஆட்சிக்கு வந்தது. பார்ப்பனல்லாதார் உரிமைகளை உறுதி செய்தல், இந்தி சமஸ்கிருத எதிர்ப்பு, தமிழ் பற்றை முன்வைத்தல், சிறுபான்மையினர் பக்கம் நிற்றல், வடவர் ஆதிக்க எதிர்ப்பு போன்றவற்றை திமுக உறுதியாக செய்தது

திராவிட அரசியல் ஊழல், வாரிசு அரசியல், குடும்ப அரசியல், தனிநபர் வழிபாடு போன்ற தீங்குகளை செய்திருந்தாலும், பார்ப்பன எதிர்ப்பு- சிறுபான்மை ஆதரவு, இந்துத்துவா எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, மாநில சுயாட்சி போன்றவை அதன் கொடைகள்

சமகாலச் சூழலில் சமூகநீதி கருத்தாக்கம் மறுவரையறை செய்யப்படவேண்டும்..தலித்துகளுக்கான அதிகாரத்தை உறுதி செய்வது, இடைநிலை சாதி ஆதிக்க எதிர்ப்பு என்று நகரவேண்டும்…மாநில சுயாட்சி என்பது மாநிலத்தில் ஒற்றைக் கட்சி ஆட்சி என்பதாகச் சுருங்கிவிடக்கூடாது.

sep 3, 2023

இந்திய ஜனநாயகம்

இந்திய ஜனநாயகம் ஏராள சிராய்ப்புகளுடன் விழுந்து எழுந்து சமாளித்து போய் வருகிறது. விடுதலைப் போராட்டக் கனவுகள், அரசியல் அமைப்புச் சட்ட விழுமியங்கள், குடியரசாதல், 1952 முதல் வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை என்கிற பெரும் பாய்ச்சல் புரட்சி வழியாக இந்திய ஜனநாயகம் தவழ ஆரம்பித்தது.

சாதி நாயகம், மத நாயகம், நில புல ஜமின் சொத்து நாயகம் என்று வாழ்ந்த இந்திய சமூகம் தன்னை ஓரளவிற்கு நவீனப்படுத்திக்கொண்டு, நாட்டுப் பிரிவினை - பதட்டம் கடந்து வயது வந்தோர் வாக்குரிமை- அரசியல் அமைப்பு சட்டப்படியான சட்ட அவைகள், நிறைவேற்றும் அமைச்சரவைகள், நீதி அவைகள், பத்திரிகைகள் என தனது ஜனநாயக இயக்கத்தை சாதிக்க ஆரம்பித்தது. இந்தியா தேறுமா எனக் கேட்டவர்கள் வியந்து அதன் ஜனநாயகத்தை, மக்கள் தரும் தீர்ப்பைப் பார்த்தனர்.

இந்தியா தனது ஜனநாயகப் பாதையில் சீராக செல்லமுடியாத சங்கடங்களை அனுபவிக்க ஆரம்பித்தது. எல்லாவற்றிலும் பெரும்பான்மை அடிப்படையா- அல்லது அன்றாட அனுசரிப்புகளில் பல்வேறு தரப்புகளையும் உடன் அழைத்துச் செல்வதா என்கிற தடுமாற்றத்தை அது காணத்தொடங்கியது. வலுவான ஒரே கட்சி- அதில் வலுவான ஒரே தலைவர்- அவர் மீது நாயக காவிய கடவுட் தன்மை ஏற்றி - ஏக அதிகார திசைகளை அது காணத்துவங்கியது. அந்த ஒரே தலைவர்தான் இந்தியா என சுருக்கிப் போற்றும் அகவல்கள் எழுதப்படலாயின. ஜனநாயகம் தனக்கான சாமன்ய தன்மையை இழந்து, சாகச நாயகர்களை தேடத்தொடங்கியது. நல்லாட்சி தருவதற்கு ஒரே ஒரு தேவதூதர் - அவர் யார் எனத் தேடலானது. அவரை பாட்டுடைத் தலைவராக்கிட பல்லாக்குகள் செய்யப்படலாயின.

வாக்காளர்க்கு ஒரே தகுதி குறைந்த பட்ச வயது - முன்பு 21- இப்போது 18 என்பதை மட்டுமே பார்க்கவேண்டிய - அதிலே தான் பெரும்பான்மை என ஆரம்பித்த ஜனநாயகம், தனது பழைய பண்டைய மூட்டை முடிச்சுகளையெல்லாம் அதன் மீது ஏற்றிக்கொண்டுவிட்டது. இப்போது வேட்பாளர்க்கும் சாதி உண்டு- வாக்காளர்க்கும் சாதி உண்டு- மதம் உண்டு- இனம் , மொழி உண்டு. இந்த பண்டைய பெருமிதங்களை ஏற்றிக்கொண்ட சவாரியாக நவீன ஜனநாயகம் தனது தொடக்க ஆன்மாவை infect ஆக்கிக்கொண்டுள்ளது. இன்று அதற்கு 'பண நாயக' என்கிற கொடும் வியாதியும் சேர்ந்துள்ளது. பணமுள்ளவன் பாராளாலாம் என்பது எழுதா கிளவி.

பெரும்பான்மை என்பது தேர்தல் முடிவுகளுக்கு பின்னர் தீர்மானிக்கப்படவேண்டிய ஒன்று. அது எந்த fixation க்கும் அடங்காது என்ற நிலை திரிந்துவிட்டது. இப்போது மதம் எதிர் இருமைகளாக இந்து- முஸ்லிம் என்கிற முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட வழியாக ஜனநாயகம் செலுத்தப்படலாகிறது. எத்தொகுதியில் எச்சாதி பெரும்பான்மை என்ற முன்கூட்டிய பெரும்பான்மை வழியில் அது பயணிக்க வேண்டியதாயுள்ளது.

வயது வந்தோர் வாக்குரிமைப் படியிலான தீர்மானிக்கப்படவேண்டிய ஜனநாயகம், முன்பே தீர்மானிக்கப்பட்ட பெரும்பான்மை மத சாதி வழி சமூக வழியில் தீர்மானிக்கப்படும் நிலை முழுமையாகி வருகிறது.

இந்துத்துவா என்கிற பெரும்பான்மையை அதன் வழி விழையும் அரசியலும், இஸ்லாம் அல்லது வேறு மதவழிப்பட்ட அரசியலும் பரவலான space யை எடுத்துக்கொண்டுள்ளன. அது போலவே சாதியும் பெருமளவு இடத்தை எடுத்துள்ளது. நாங்கள் இந்து இல்லையா என அனைத்துக் கட்சிக்காரர்களையும் அந்த மத அரசியல் பேச வைத்துவிட்டது.

இந்தியர் என்ற அடையாளம் நோஞ்சானாக்கப்பட்டு, தேவையான நேரங்களில் எடுத்துக்கொண்டால் போதும்- அது பிரதான அடையாளமல்ல என regionalisation of Politics செய்துள்ளது. மத்தியில் ஆட்சிக்கு வந்தால் தேசிய கட்சிகள் ஏக இந்திய அடையாளத்தை அதன் புரிதலில் முன் வைக்கும். எதிர் கட்சியாக இருந்தால் அதே தேசிய கட்சி , மாநிலங்களுக்கான குடம் கண்ணீர் வடிப்பதைக் கண்டு வருகிறோம்.

இப்போது 'சாதி சென்சஸ்' என்கிற கோரிக்கையும் வலுத்து வருகிறது. ஒருவேளை அது வந்தால் , எந்த சாதி எவ்விடத்தில் என்ன சதத்தில் எவற்றையெல்லாம் பெற்றுள்ளது. அந்த ' நம்ம சாதிக்காரர்' அடைய வேண்டிய தூரம் என்ன என்பது கணக்காக மாறும். எக்கட்சியில், எவ்வமைப்பில் எந்த அளவு பொறுப்புகளில் எந்த சாதிக்காரர்கள் என்கிற கணக்கும் பார்க்கப்படும். இப்போதும் அது உள்ளார்ந்து இல்லாமல் இல்லை. ஏற்கனவே உள்ளார்ந்து federation of castes ஆக இருக்கும் இந்தியா அதை வெளிப்படையாக செலாவணியாக்கலாம்.

மத சாதிய அடையாளங்களின் இடமாக வீடு, பள்ளி, சந்தைகள், நிறுவனங்கள், போலீஸ்துறை என அனைத்தும் மாறும் சமூகத்தில் ஜனநாயகம் அதன் இந்தியத்தன்மையை பெற்றுவிட்டதாக அறிஞர்கள் ஆய்வுத்தாள்களை தரலாம்.

விஸ்வ குரு என்ற பெயரில் இந்திய மாடல் மத சாதி மொழிவாரி ஜனநாயகம் உலக பல்கலை ஆய்வுகளில் , பெரும் கார்ப்பரேட் நிதி உதவிகளுடன் ஆய்வுக் கூடங்களை- chair களைப் பெறலாம். பன்முக இந்தியா என்பதற்கான விளக்கங்களும், வளர்ச்சிக்கு ஒரே நாடு முழக்கங்களும் தொடர்ந்து மோதல் காணும் ..

இந்தியா சந்திர சூரியனை ஆய்வும் செய்யும்- நவகிரக ஆராதனையும் செய்யும் என்கிற பெருமிதங்களும் கூடவே நகர்ந்து கொண்டிருக்கும்....

இந்திய ஜனநாயகத்தின் சுற்று வட்ட பாதை புதிராகவும் இருக்கவே செய்கிறது..

sep 2, 2023

திராவிட மாயை -சுப்பு

அறிஞர் அண்ணாவின் ஆரியமாயை, வர்ணாஸ்ரமம், பணத்தோட்டம், இன்பத் திராவிடம் போன்ற புத்தகங்களை அடுத்தடுத்து முன்னர் படித்த நினைவுண்டு.

பணத்தோட்டத்தை எடுத்துக்கொண்டு தோழர் பி ராமமூர்த்தி அவர்கள் தனது ஆரிய மாயையா திராவிட மாயையாவில் விரிவாக விமர்சனத்துடன் விவாதித்திருந்தார்.

அண்ணாவின் ஆரிய மாயையை மீண்டும் கிண்டில் வழி சென்ற வாரம் வாசித்தேன். ஏனெனில் சுப்புவின் மூன்று வால்யூம் 'திராவிட மாயை ஒரு பார்வை'யை படிப்பதற்கு முன்னால் அண்ணாவின் பார்வையை நினைவூட்டிக்கொள்ளவேண்டும் என்பதற்காக. அண்ணா அதில் மேற்கு - குறிப்பாக ஆங்கில பிரஞ்சு ஆய்வாளர்களை மேற்கோள்காட்டி வந்தேறி ஆரியர்களின் சூது நயவஞ்சகம் அவர்களை வெளியேற்றி திராவிடம் கொணரவேண்டிய அவசியத்தின் கருத்துப் போராட்டத்தை அதில் முன்னெடுத்திருப்பார்.

சுப்புவின் திராவிட மாயை புத்தகத்தை நான்காவது பதிப்பாக கடந்த 2022ல் மூன்று பகுதிகளாக rare books என்கிற பதிப்பகத்தார் கொணர்ந்துள்ளனர். ஆர் எஸ் எஸ் சங்க் குடும்பம் சார்ந்த தமிழக அறிவுஜீவிகள் அரவிந்தன் நீலகண்டன், வெங்கடேசன் போன்றவர்கள் ஒத்துழைப்பில் எழுதியதை சுப்பு ஏற்றுள்ளார். தான் எழுதும் விவரங்களுக்கு முதல் பாகத்தில் 51 துணை நூல்களை தந்து ஆதாரங்களை சொல்லியுள்ளார். அண்ணா நூலில் ஆங்காங்கே எந்த ஆய்வாளர் என்ன எழுதினார் என்பது தரப்பட்டிருக்கும். சுப்புவும் இந்த முறையை கையாண்டுள்ளார். ஆர் எஸ் எஸ் நண்பர்களின் உதவி என்றாலே அதில் அவர்களுக்கான அரசியல் தேவை அமராமல் இருக்காது. வரலாறு என்பது அவரவர் தேவைக்கான கட்டுமானமாகவே இருப்பதைத்தான் நான் படித்த இந்த புத்தகங்கள் எனக்கு உணர்த்தின. எவர் எழுதியதையும் அதுவே முற்றானது என எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை என்கிற பாலபாடம் மீண்டும் என்னுள்.. இனி சுப்புவின் எழுத்தை பார்க்கலாம்...

அண்ணாவின் ஆரிய மாயை பற்றி சுப்பு எழுதியது ..

" திராவிட நாடு இதழில் சி என் அண்ணாதுரை எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து 1943ல் 'ஆரிய மாயை' என்ற பெயரில் புத்தகமாக வெளிவந்தது. கிறித்துவ பாதிரிமார்கள் ஹிந்து மதம் குறித்து வெளியிட்ட கருத்துக்களை அண்ணாதுரையின் அடுக்கு மொழியால் ஜோடித்ததுதான் இந்நூல். பிராமணர்கள் ஆரியர்கள் என்று

அண்ணாதுரை எழுதியிருந்தார். 1949ல் பி எஸ் குமாரசாமி ராஜா முதலமைச்சராக இருந்தார். காங்கிரஸ் ஆட்சி பீடத்தில் இருந்தது. ஆரிய மாயை தடை செய்யப்பட்டது. பின்னர் 1967ல் அண்ணாதுரை தமிழக முதல்வரானார். அவருடைய ஆட்சிக் காலத்தில் இந்தத் தடை நீக்கப்படவில்லை…அண்ணாதுரை அரசியல் சட்டத்திற்கு மட்டுமல்ல, அரசியல் நெறிகளுக்கும் உட்பட்டே செயல்பட்டார் என்பதற்கான சான்று இது"

நீதிக்கட்சியின் தலைவர்கள் ராஜாக்களும் ஜமீன்களுமாக இருந்த நீண்ட பட்டியல் ஒன்றை சுப்பு இதில் தந்திருப்பார். 1937 தேர்தல் குறித்த வேறு ஒரு தகவலைத் தருகிறார்.

இராமநாதபுர தொகுதிக்கு நீதிக்கட்சி சார்பில் மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்களும், காங்கிரஸ் சார்பில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களும் போட்டியிட்டனர். பிரிட்டிஷ் அரசாங்கம் தேவருக்கு வாய்ப்பூட்டு போட்டது. தேவர் பேசமுடியாது போய் இருகரம் கூப்பி சென்றதுடன் வெற்றியும் பெற்றார்

மலையாள கவிஞர் கே சச்சிதானந்தன் எழுதினாராம்

" தென்னிந்தியர்கள் முழுவதும் ஒரே இனத்தவரோ, வம்சத்தவரோ அல்ல. தமிழர்களும் அப்படித்தான். இன்று ஆரியர் குடியேற்றம் என்ற கருதுகோள் கூட மறுவிசாரணை செய்யப்பட்டு வருகிறது.."

திராவிட இயக்கம் ஒரு மார்க்சிய ஆய்வில் தோழர் அருணன் எழுதியதை சுப்பு காட்டுகிறார். அருணன் எழுதியதாவது

" சொல்லளவில் மட்டுமல்ல, செயலளவிலும் ஏகாதிபத்திய தாசனாகவே இயங்கி வந்தது நீதிக்கட்சி..அதுவும் எந்த அளவிற்கு என்றால் ஜாலியன்வாலாபாக் படுகொலையை ஆதரித்து அறிக்கைவிடும் அளவிற்கு..அதிலும் அறிக்கைவிட்டவர்கள் யார் தெரியுமா? இன்றைக்கும் திராவிட இயக்கத்தின் தனிப்பெரும் தலைவர்கள் என்று எவரை திராவிட இயக்கத்தவர்கள் புகழ்ந்துரைத்துக் கொண்டிருக்கிறார்களோ அந்த தியாகராசச் செட்டியாரும், டி எம் நாயரும்தான்"

தோழர் பி ஆர் எழுதியதை சுப்பு காட்டுகிறார்

" நீதிக்கட்சி அது தோன்றிய காலத்திலிருந்து அதன் அந்திம காலம்வரை பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியை ஆதரித்து நின்றது. அது ஜமீந்தார்கள் மற்றும் தரகு வியாபாரிகளின் கட்சியாக இருந்தது"

1918ல் பெரியார் எப்படி பேசினார் என்ற மேற்கோள் ஒன்றையும் சுப்பு தந்துள்ளார்

" நாம் பிராமணன் மீது எவ்வெக் குற்றங்களைச் சுமத்துகிறோமோ அவ்வக் குற்றங்களைப் பஞ்சமர் முதலியோர் நம்மீது சுமத்துகின்றனர்"

கோவை அய்யாமுத்துவின் 'எனது நினைவுகள்' புத்தகத்திலிருந்து சுப்பு காட்டுவது

" வைக்கத்துப் போர்க் காலத்தில் நாயக்கரும் நானும் மோட்டாரிலும் படகுகளில் திருவாங்கூர் முழுவதும் பிரயாணம் செய்தோம். நாயக்கர் கையில் எப்போதும் பாரதியாரின் பாட்டுப் புத்தகம் இருக்கும். மோட்டாரில் போய்க்கொண்டே வந்தே மாதரம், வாழ்க செந்தமிழ், மறவன் பாட்டு, முரசுப்பாட்டு ஆகியவைகளை அவர் உரக்கப்பாடுவார்"

இந்தச் செய்தியை இவர்கள் ஏன் தரவில்லை என சுப்பு வினவுவார்

" நெடுஞ்செழியன் திராவிட வரலாறில் பாரதி பாடல்கள் என்கிற செய்தியில்லை

வீரமணியின் புத்தகத்தில் இந்த செய்தியில்லை

சாமி சிதம்பரனார் தமிழர் தலைவரில் இல்லை

கவிஞர் கருணாநந்தம் எழுதிய தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு என்ற நூலிலும் இந்தச் செய்தி இல்லை.

சின்னக் குத்தூசி எழுதிய காந்தியடிகள் கட்டளைப்படி நடந்ததா வைக்கம் என்பதிலும் இந்தச் செய்தி இல்லை

சுப வீரபாண்டியன் எழுதிய பெரியாரின் இடதுசாரித் தமிழ்த் தேசியம் என்ற நூலிலும் இந்தச் செய்தி இல்லை

ஞாநி எழுதிய அவர்தாம் பெரியார் என்பதிலும் இல்லை

மங்கள முருகேசன் என்ற ஆய்வாளர் மட்டும் இந்தச் செய்தியை பதிவு செய்தியைப் பதிவு செய்துள்ளார்

- சுப்பு எழுதியவை குறித்து இங்கு தரப்பட்டவை அனைத்தும் முதல் 90 பக்கங்களுக்குள் பகுதி 1 திராவிட மாயை ஒரு பார்வையில் கிடைக்கிறது.

தோழர் பட்டாபியின் நூல்கள்

1. மார்க்சியத் தடங்கள்

2. ரோசாலக்ஸம்பர்க்

3. போராளிகளின் குரல்

4. பகவத்கீதை பன்முகக் குரல்கள்

5. Trade Justice in Telecom

6. Selected Ideas of O.P Gupta

7. ஹெகல் துவங்கி..

8. கார்க்கியின் அரசியல்வெளி

9. நவீன சிந்தனையின் இந்தியப் பன்முகங்கள்

10. காந்தியைக் கண்டுணர்தல்

11. நேருவின் மரபு

12. பெரியாரின் பொதுவுடைமை புரிதல்

13. அம்பேத்கரும் கம்யூனிசமும்

14. தோழர் காந்தி மகாத்மாவின் சோசலிச உரையாடல்

15. பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் (என் எளிய வாசிப்பில்)

16. லெனின் நான்கு கட்டுரைகள்

17. என் வாசிப்பில்…

சிறு வெளியீடுகள்

1. ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா

2. சிகாகோ மேதின தியாகிகள்

3. பகுனின் போராட்ட வாழ்வும் அனார்க்கிசமும்

4. விடுதலைக்கு முன்னர் எம் என் ராய்

5. பிரடரிக் எங்கெல்ஸ் நட்பின் சிகரம்

6. நேதாஜி சுபாஷ் – கம்யூனிஸ்ட்கள் உறவும் உரசலும்

7. காந்தியும் கம்யூனிசமும்

8. வட்டமேஜை மாநாட்டில் அம்பேத்கர்

9. வரலாற்றில் செளரி செளரா (நூற்றாண்டின் நினைவாக)

10. தோழர் டிராட்ஸ்கி சில இடுகைகள்

11. ஆச்சார்யா கிருபளானி

12. மினு மசானி

இணையதளம்

www.pattabiwrites.in